a monthly information digest இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி a monthly information digest
இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி a monthly information digest இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி

ஜூன் 2025 June | இதழ் 413 Issue

கனடிய மூத்த தமிழ் இதழ்

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ESTD From The Community To The Community 1991

Premier Canadian Tamil Journal

கனடா - பிராம்டனில் தமிழின அழிப்பு நினைவகம்



உளநல ஆதரவு சேவைக்கு ஒரு மில்லியன் நன்கொடை

கனடிய நாடாளுமன்றத்தில் ஈழத்தமிழர் இருவர்

சமூகத்துடன் இணைந்த வளர்ச்சி ஸ்தாபிதம் -1991

35வது ஆண்டில் 35th Year

Growing with the Community ESTD-1991

இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி a monthly information digest

ஆசிரியரிடமிருந்து... **From the Editor**

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

ஆரம்பம்
பெப்ரவரி 1991

P.O. Box-3, Station F
Toronto, ON M4Y-2L4,
Canada

தொலைபேசி:
416 920 9250

மின்னஞ்சல்
tamilsinfo@sympatico.ca

தயாரிப்பு
ஈழத்தமிழர் தகவல் நிலையம்
ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

வெளியீடு
அகிலன் அசோஷியேற்ஸ்

முதன்மை ஆசிரியர்
திரு எஸ். திருச்செல்வம்

இணை ஆசிரியர்
றஞ்சி திரு

உதவி ஆசிரியர் &
தயாரிப்பு முகாமையாளர்
சசி பத்மநாதன்

உதவி ஆசிரியர்கள்
குயின்ரஸ் துரைசிங்கம்
அனோஜினி குமாரதாசன்

பொது முகாமையாளர்
ஆர். ஆர். ராஜ்குமார்

பொதுமக்கள் தொடர்பு
என். விமலநாதன்
என். குமரதாசன்
இ. சிவலிங்கம்
வே. விவேகானந்தன்
ப. சிவசுப்பிரமணியம்

தொழில்நுட்ப உதவி
ஹரன்கிறாஃப்

மாதாந்தம்
5000 பிரதிகள்

ஆண்டு மலர்
6000 பிரதிகள்

இணையம்
www.tamilsinformation.info

நீதி கேட்கும் ஒளி

எந்த விடயமானாலும் எவராவது ஒருவர் முதலாவது கல்லைப் போட்டால் - தான், ஏனையோர் அதனைத் தொடருவார்கள் என்று கூறப்படுவதுண்டு.

முதலாவது கல்லை ஒருவர் போடும்போது மக்கள் மத்தியில் இது தொடர்பான உணர்வும், தேவையும் ஏற்படுமென்பது உண்மைதான். இலங்கையில் இடம்பெற்ற தமிழினப் படுகொலைக்கு கனடாவின் பிராம்டன் நகரில் நிர்மாணிக்கப்பட்டுள்ள நினைவகம் (நினைவுத்தூபி) இதற்கு நல்ல உதாரணம்.

காலாதிகாலமாக தமிழர்மீது சிங்கள ஆட்சியாளர்களின் அனுசரணையுடனும் அவர்கள் வழங்கிய ஊக்குவிப்புடன் மேற்கொள்ளப்பட்ட இனரீதியான தாக்குதல்கள் பொதுவாக இனக்கலவரம் என்றே அழைக்கப்பட்டன. 1958, 1983களின் மோசமான தாக்குதல்களையும் இவ்வாறே அழைத்தனர்.

முள்ளிவாய்க்காலில் அப்பாவிப் பொதுமக்கள் ஆயிரம் ஆயிரமாக அரச பயங்கரவாதத்தால் கொன்றொழிக்கப்பட்ட பின்னரே ஜெனிவாவின் கதவுகள் திறக்கப்பட்டது. அதன் பின்னரே தமிழினப் படுகொலை என்பது சர்வதேச நிரலில் அரங்கேறியது. வடமாகாண சபையின் இனப்படுகொலைக்கான தீர்மானம்கூட அப்போதுதான் நிறைவேற்றப்பட்டது.

எனினும், சிங்கள தேசம் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைக்காக அமைக் - கப்பட்ட நினைவுத்தூபி சிதைக்கப்பட்டது இதற்கு உதாரணம். ஒன்றின் முடிவே இன்னொன்றின் ஆரம்பம் என்பதற்கிணங்க யாழ்.பல்கலைக்கழக நினைவுத்தூபி அழிப்பே கனடாவில் இனஅழிப்புக்கான நினைவகம் அமைப்பதற்கு அத்திவாரமிட்டது.

ஒன்ராறியோ மாகாண சட்டசபையில் அதன் உறுப்பினர் விஜய் தணிகாசலத்தினால் முன்மொழியப்பட்டு ஏற்கனவே நிறைவேற்றப்பட்டிருந்த தமிழினப் படுகொலை அறிவூட்டல் வாரச் சட்டம் இதற்கு வலுவூட்டுவதாக அமைந்தது. முள்ளிவாய்க்கால் பதினாறாவது ஆண்டு நினைவு வாரத்தில் பிராம்டன் நகர முதல்வர் இந்த நினைவகத்தை பொதுமக்கள் பாவனைக்கு திறந்து வைத்தது வரலாற்று நிகழ்வாகும்.

மே 18ஐ இனப்படுகொலைக்கான போர்க்குற்ற நாளாக தமிழர்கள் அனுஷ்டிக்க, மறுநாளான மே 19ஐ போர் வீரர் நாளாக இலங்கை அரசு கொண்டாடுகிறது என்றால் இனப்படுகொலை என்பது அதன் நிகழ்ச்சி நிரலில் இடம்பெற்ற ஒன்று என்பது நிரூபணமாகிறது.

இனப்படுகொலை நினைவகத்தை ஏற்றுக்கொள்ள முடியாத இலங்கை அரசு கொழும்பிலுள்ள கனடிய உயர் ஸ்தானிகரை அழைத்து தங்கள் ஆட்சேப - ணையை தெரிவித்துள்ளது. சிங்கள, பௌத்த இனவாத அரசியல்வாதிகள் இது தொடர்பாக வெறித்தனமான அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றனர்.

அத்தனை எதிர்ப்புகளையம் தாண்டி ஒரு திருப்புமுனையாக பிராம்டன் இனஅழிப்பு நினைவகம் வெளிச்சம் தருகிறது.

இது, வெறுமனே துக்கத்தை அனுஷ்டிக்கும் இடமாகவன்றி, நீதியைப் பெறுவதற்கான ஒளியாக நின்று இனப்படுகொலை குற்றவாளிகளை பொறுப்புக்கூறும் நிலைக்கு கொண்டு செல்ல வேண்டும். அதற்கேற்றவாறு உலகில் தமிழர் வாழும் நாடெங்கும் தமிழின அழிப்பு நினைவகங்கள் உருவாக வேண்டும்.

திரு எஸ். திருச்செல்வம்

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

Established
February 1991

P.O. Box-3, Station F
Toronto, ON M4Y-2L4,
Canada

Tel: 416 920 9250

E-mail
tamilsinfo@sympatico.ca

Produced by
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto & Thamil Information Research Unit (THIRU)

Published by
Ahilan Associates

Editor in chief
Thiru S. Thiruchelvam

Associate Editor
Ranji Thiru

Assistant Editor and Production Manager
Sasi Pathmanathan

Assistant Editors
Quintus Thuraisingam
Anojini Kumaradasan

General Manager
R. R. Rajkumar

Public Relation
N. Vimalanathan
N. Kumaradasan
R. Sivalingam
V. Vivekananthan
P. Sivasubramaniam

Technical Support
Haran Graph

Monthly
5000 Copies

Annual
6000 Copies

Website
www.tamilsinformation.info

றொறன்ரோ நகரசபை ஸ்காபரோ - றூஜ்பார்க் இடைத்தேர்தல்!

றொறன்ரோ நகரசபையின் ஸ்காபரோ - றூஜ்பார்க் வட்டார உறுப்பினராகவிருந்த ஜெனிபர் மக்கெல்வி கடந்த மாதம் இடம் பெற்ற பொதுத்தேர்தலில் ஏஜக்ஸ் தொகுதியில் போட்டியிட்டு தெரிவானதையடுத்து, அவரது நகரசபை உறுப்பினர் பதவிக்கு இடைத் தேர்தல் நடத்த றொறன்ரோ நகரசபை தீர்மானித்துள்ளது. இதற்கான வேட்பு மனுக்கள் இந்த மாதம் 23ம் திகதி முதல் ஏற்கப்படவுள்ளது. இடைத்தேர்தல் செப்டம்பர் 29ம் திகதி இடம்பெறும்.

றொறன்ரோ நகரசபையின் ஸ்காபரோ - றூஜ்பார்க் வட்டார உறுப்பினராக முன்னர் பணியாற்றியவரும், தற்போது றொறன்ரோ மாவட்ட கல்விச்சபையின் தலைவராக இருப்பவருமான திரு. நீதன் சண் இந்த இடைத்தேர்தலில் போட்டியிடவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழர் சமூகத்தில் நன்கறியப்பட்டவரான இவர் முன்னர் மார்க்கம் கல்விச் சபையில் உறுப்பினராகவும் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பணியாற்றியவர். கனடாவில் தமிழர் மரபுரிமை திங்கள் நிகழ்வின் ஆரம்பகர்த்தாவாகவும் விளங்கும் இவர் பல்வேறு சமூக முன்னேற்ற திட்டங்களை முன்னின்று செயற்படுத்தி வருபவர்.

முனைவர் பால. சிவகடாட்சத்தின் தமிழ் மருத்துவ நூலுக்கு தமிழ்நாடு விருது

தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றமும், நியு செஞ்சரி புத்தக நிறுவனமும் இணைந்து நடத்திய 2024ம் ஆண்டுக்கான இலக்கியப் போட்டியில், கனடாவில் வாழும் முனைவர் பால. சிவகடாட்சம் எழுதிய தமிழ் மருத்துவம் என்ற நூலுக்கு சிறந்த ஆய்வு நூலுக்கான விருது கிடைத்துள்ளது. விருதுக்காக தெரிவு செய்யப்பட்ட 12 நூல்களில் தமிழ் மருத்துவம் மட்டுமே ஆய்வு நூலாகும். முனைவர் பால. சிவகடாட்சம் தமிழர் தகவலின் தொடர் எழுத்தாளர்களில் ஒருவர்.

Skilled migrants and international students Leaving the United States for Canada

Skilled migrants and international students are leaving the United States for Canada in growing numbers. A March 2025 report by Statistics Canada reveals a sharp rise in the numbers of American non-citizen residents moving to Canada. Reasons given are largely restrictive U.S. immigration policies, visa caps and long wait times for green cards.

Since U.S. President Donald Trump's election win and early days in office, Google searches by American residents on how to move to Canada, New Zealand and Australia have surged. Several high-profile academics have relocated to Canadian universities amid growing concerns over threats to academic freedom.

அமெரிக்காவில் வசித்துவந்த வெளிநாடுகளைச் சேர்ந்த தொழில்சார் திறமையானவர்களும், சர்வதேச மாணவர்களும் அங்கிருந்து வெளியேறி கனடாவுக்குள் குடியேறுவது அண்மைய மாதங்களில் முன்னெப்போதையும்விட அதிகரித்து வருவது தெரியவந்துள்ளது. கனடாவின் மார்ச் மாத புள்ளிவிபர அறிக்கை இதனை வெளிப்படுத்தியுள்ளதாக "ஏசியன் பசிபிக் போஸ்ட்' குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்க குடியுரிமை இல்லாதவர்களே இவ்வாறு கனடாவில் குடியேறுவது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அமெரிக்காவின் அண்மைய குடியேற்றக் கொள்கையும், விசா பெறுவதற்கு வரையறுக்கப்பட்டுள்ள வரம்புகளும், கிறீன் கார்ட் பெறுவதற்கான நீண்டகால காத்திருப்புமே அங்கிருக்கும் வெளிநாட்டவர்களை வெளியேற வைப்பதற்கான காரணமெனவும் இங்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் தேர்தல் வெற்றி மற்றும் பதவியின் ஆரம்ப நாட்களிலிருந்து கனடா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளுக்கு எவ்வாறு செல்வது என்பது குறித்து அமெரிக்க குடியிருப்பாளர்களின் கூகுள் தேடல்கள் அதிகரித்து வருவது கவனிக்கப்பட்டுள்ளது.

கல்வி கற்பதற்கான பல்வேறு அச்சுறுத்தல்கள் அதிகரித்து வரும் கவலைகளுக்கு மத்தியில் அங்கு வாழும் பல கல்வித் திறமையுள்ளவர்கள் கனடிய பல்கலைக்கழகங்களுக்கு அண்மையில் இடம்பெயர்ந்துள்ளனர் என்பதும் தெரியவந்துள்ளது.

பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணம் சமீபத்தில் சர்வதேச அளவில் பயிற்சி பெற்ற சுகாதார பராமரிப்பு வல்லுனர்களை - குறிப்பாக அமெரிக்க மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுக்கான தொழில்சார் சான்றிதழ் அங்கீகார செயல்முறையை ஒழுங்குபடுத்துவதற்கான முக்கிய கொள்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்தி அதனை அறிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

திறமையான புலம்பெயர்ந்தோருக்கான கனடாவில் முறையீடு நடைமுறை மற்றும் அபிலாசைகள் காரணிகளின் கலவையில் வேரூன்றியுள்ளது என்பதைக் காட்டுவதாகவும், உயர்ந்த வாழ்க்கைத் தரம் - சிறந்த தொழில்வாய்ப்புகளுக்கான வாக்குறுதி - அணுகக்கூடிய நிரந்தர வதிவிட வசதி போன்றவை பரந்த அளவில் பலரை இங்கு குடியேற அனுமதிப்பதாக றொறன்ரோ மெற்ரோ பொலிற்றன் பல்கலைக்கழகத்தின் இடப்பெயர்வு மற்றும் ஒருங்கிணைப்புத் திட்டம் மேற்கொண்ட ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

சர்வதேச மாணவர்களை இலக்காகக் கொண்ட குடியேற்ற எண்ணிக்கையைக் குறைக்கும் கனடாவின் புதிய கொள்கை மாற்றங்கள் உலகளாவிய ரீதியில் புதிதாக சர்வதேச மாணவர்களை குடியேற மட்டுப்படுத்தியிருப்பினும், அமெரிக்காவில் புதிய ஜனாதிபதியால் உருவாக்கப்பட்டிருக்கும் சர்வதேச மாணவர்களுக்கான கெடுபிடி காரணமாக அவர்கள் கனடாவுக்கு வருவதையே விரும்புவதாகவும் தெரியவந்துள்ளது. அமெரிக்காவைவிட கனடாவில் நிரந்தர வதிவிட உரிமை பெறுவது இலகுவானதாக இருப்பதாக புதிதாக இங்கு குடியேறியவர்கள் தெரிவித்துள்ளனர்.

எஸ்தி

றஞ்சி திரு

சின்னச் சின்ன தகவல்கள்

கடந்த ஏப்ரல் மாதம் இடம்பெற்ற கனடிய பொதுத்தேர்தலில் ஏற்கனவே பதவியிலிருந்த லிபரல் கட்சி மீண்டும் சிறுபான்மை அரசாக புதிய தலைவர் மார்க் கானி (பிரதமர்) தலைமையில் ஆட்சியில் ஏறியுள்ளது.

லிபரல் கட்சி 169, கனடிய கன்சர்வேடிவ் கட்சி 144, புளொக் கியூபெக்கா 22, என்.டி.பி. 7, பசுமைக் கட்சி 1 ஆகியவை இத்தேர்தலில் தமக்கான ஆசனங்களைப் பெற்ற கட்சிகளின் எண்ணிக்கை.

கனடிய கன்சர்வேடிவ் கட்சி தலைவர் பியர் பொலிவியர் ஒட்டாவாவில் தமது தொகுதியிலும், என்.டி.பி. கட்சி தலைவர் ஜக்மித் சிங் பிரிட்டிஷ் கொலம்பியாவில் தமது தொகுதியிலும் முதல் தடவையாக தோல்வியை தழுவியுள்ளனர்.

தொடர்ந்து 20 வருடங்கள் ஒட்டாவா கால்ற்றன் பகுதியில் வெற்றி பெற்று வந்த பியர் பொலிவியரை எதிர்த்து இம்முறை 91 வேட்பாளர்கள் போட்டியிட்டது கனடிய தேர்தல் வரலாற்றில் புதுமையான ஒன்று.

புதிய அரசாங்கத்தில் 28 பேர் அமைச்சர்களாகவும், 10 பேர் ராஜாங்க அமைச்சர்களாகவும் இடம்பெற்றுள்ளனர். இவர்களுள் 24 பேர் முதன் முறை தேர்தலில் வெற்றி பெற்றவர்கள். ஜஸ்ரின் ரூடோ அரசில் அமைச்சர்களாகவிருந்த 10 பேர் புதிய அமைச்சரவையில் இடம்பெறவில்லை.

அதிகூடிய மக்களைக் கொண்ட ஒன்ராறியோ மாகாணத்திலிருந்து 11 எம்.பிக்கள் அமைச்சர்களாகியுள்ளனர். கியுபெக் மாகாணத்திலிருந்து 7 எம்.பிக்களுக்கு அமைச்சர் பதவி கிடைத்துள்ளது.

இந்தத் தேர்தலில் அனைத்துக் கட்சிகளிலிருந்தும் இந்திய வம்சா - வளியினர் 65 பேர் போட்டியிட்டனர். இவர்களுள் 22 பேர் வெற்றி பெற்றுள்ளனர். லிபரல் கட்சியில் வெற்றி பெற்றவர்களுள் 4 இந்திய வம்சாவளியினர் அமைச்சர்களாகியுள்ளனர்.

பெரும்பான்மைக்கு 172 எண்ணிக்கை தேவையாக இருக்கையில் அதனிலும் 3 குறைவான எண்ணிக்கையை லிபரல் கட்சி பெற்றுள்ளது. இதனால் முக்கியமான சில மசோதாக்களை நிறைவேற்றுவதற்கு எதிர்கட்சிகளின் ஆதரவை பெறவேண்டிய நிலைமை இம்முறையும் ஏற்பட்டுள்ளது.

ஆறு வரையான தொகுதிகளில் வெற்றி பெற்றவர்களின் வாக்குகள் நூறுக்கும் குறைவான வித்தியாசத்தில் இருந்ததால் இங்கு வாக்கு எண்ணிக்கை மீள இடம்பெற்றது. இதில் 3 தொகுதிகளில் மாற்றம் ஏற்பட்டது. ஒரு தொகுதியில் ஒரு வாக்காலும், இன்னொரு தொகுதியில் 4 வாக்குகளாலும், மற்றொன்றில் 12 வாக்குகளாலும் வெற்றி தீர்மானிக்கப்பட்டது.

மார்க் கானி தலைமையிலான புதிய அரசின் முதல் அமர்வு கடந்த மாதம் 26ம் திகதி இடம்பெற்றது. பிரித்தானிய மன்னர் சார்ள்ஸ் தமது மனைவி சகிதம் இதற்கு வருகை தந்து லிபரல் அரசின் கொள்கை விளக்க உரையை வாசித்தார்.

கனடிய நாடாளுமன்றத்தில் இரண்டு ஈழத்தமிழர் பிரதிநிதிகள்

கனடிய நாடாளுமன்றத்துக்கு கடந்த மாதம் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் இரண்டு ஈழத்தமிழர்கள் சமவேளையில் நாடாளுமன்ற உறுப்பினர்களாக தெரிவாகியுள்ளனர். இவர்கள் இருவரும் கனடிய லிபரல் கட்சி சார்பில் போட்டியிட்டவர்கள்.

ஸ்காபரோ - றூஜ்பார்க் தொகுதியில் திரு. ஹரி ஆனந்தசங்கரி பெரும்பான்மை வாக்குகளால் மூன்றாவது தடவையாக தெரிவாகியுள்ளார். 1973ம் ஆண்டில் பிறந்த இவர் 2006ம் ஆண்டில் கனடிய சட்டவாள - ரானவர். 2015ம் ஆண்டில் முதன்முதலாக தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று தொடர்ந்து எம்.பியாகவுள்ளார். கனடிய பூர்வீக குடிகள் தொடர்பான அமைச்சராக ஜஸ்ரின் ரூடோ ஆட்சியில் பதவி வகித்த இவர் தற்போதைய பிரதமர் மார்க் கானியின் இடைக்கால அமைச்சரவையில் நீதியமைச் - சராகவும், சட்டமா அதிபராகவும் நியமனம் பெற்றவர். கடந்த மாதம் இடம்பெற்ற பொதுத் - தேர்தலையடுத்து அமைக்கப்பட்ட புதிய அமைச்சரவையில் கனடிய பொதுப் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஸ்காபரோ - றூஜ்பார்க்கின் கிழக்கு எல்லையில் அமைந்துள்ள பிக்கரிங் - புறுக்லின் தொகுதி - யின் நாடாளுமன்ற உறுப்பினராக ஜுனிற்றா நாதன் முதன்முறையாக தெரிவாகியுள்ளார். நீண்டகால சமூகப் பணியாளராக பணியாற்றிய இவர் புறொக் பல்கலைக்கழகத்தில் உளவி - யலில் பட்டம் பெற்றவர். 2010ம் ஆண்டு முதல் 2022 வரை மார்க்கம் கல்விச்சபையின் உறுப்பினராகவும், மார்க்கம் கல்விச்சபையை உள்ளடக்கிய யோர்க் பிராந்திய கல்விச்சபை - யின் தலைவராகவும் பணியாற்றிய அனுபவஸ்தர் இவர். இறுதியாக மார்க்கம் நகரசபையின் ஏழாம் வட்டார உறுப்பினராக பணியாற்றிய வேளையில் கனடிய பொதுத்தேர்தலில் போட்டியிட்டு எம்.பி. யாகியுள்ளார்.

ஊரும் உலகும் - 39

டொலர் எமது பிரச்சனை உமது

பேராசிரியர் அமுது ஜோசெப் சந்திரகாந்தன்

பூகோள நாணய சந்தைப்படுத்தலில் தனியரசனாக குடைபிடித்து குஞ்சாரம் ஊர்ந்த அமெரிக்க டொலர் இப்போது நடை மெலிந்து பாதை தவறுகின்றதா எனும் கேள்வி உலகப் பொருண்மிய நிபுணர்களால் அண்மைக் காலங்களில் அடிக்கடி முன்வைக்கப்படுகின்றது.

ஹார்வர்ட் பல்கலைக்கழக பொருண்மியப் பேராசிரியர் கென்னத் றோகாஃபின் எழுதி, அண்மையில் வெளிவந்த நமது டொலர், உங்கள் பிரச்சனை: கொந்தளிப்பான ஏழுதசாப்தங்களும் உலகளாவிய நிதியம் பற்றிய உள்ளக பார்வையும் புதிய பாதைகளும் எனும் நூல் பொருண்மிய உலகில் ஒரு பூகம்பத்தையே எழுப்பியுள்ளது. உலகப் பொது நாணயமான அமெரிக்க டொலரின் சகாப்தம் முடிவுக்கு வருவதுபோல் அறிகுறி தெரிகிறது எனும் தொனியில் இந்த நூலை அவர் யாத்துள்ளார். நூலாசிரியர் முன்னாள் சர்வதேச நாணய நிதியத்தின் தலைமைப் பொருளாதார நிபுணராக பணியாற்றியதோடு உலகப் பொருளாதாரம் குறித்த உலகின் முன்னணி ஆய்வாளர்களில் ஒருவர் என்பதும் குறிபிடத்தக்கது.

அமெரிக்காவின் புகழ்மிக்க யேல் பல்கலைக் கழக மேக்மில்லன் உலக விவகாரங்கள் மையத்தில் இடம்பெறும் ஹேன்றி எல். ஸ்டிம்சன் நினைவு விரிவுரைகளாக வழங்கப்பட்டு பின்னர் இவ்வருடம் மே மாதம் 6ம் திகதி 360 பக்கங்கள் தாங்கிய நூலாக அப்பல்கலைக் கழகத்தால் வெளியிடப்பட்டுள்ளது.



பின்வரும் ஆறு பகுதிகளாக இந்த நூல் வகுக்கப்பட்டுள்ளது. 1. டொலர் ஆதிக்கத்திற்கு எதிரான கடந்த கால சவால்கள், 2. சீனாவின் இன்றைய சவால் 3. ஏனைய நாடுகளின் பிரச்சனைகள் 4. மாற்று நாணயங்கள் 5. டொலர் பாவனையின் சலுகைகளும் சுமைகளும் 6. உச்சக்கட்ட டொலர் ஆதிக்கம். இந்த ஆறு பகுதிகளிலும் மொத்தமாக இருபத்தியேழு அத்தியாயங்கள் உள்ளன.

பூகோள ரீதியில் வர்த்தகம், நிதி, கடன் வழங்கல் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் உலகின் தனித்துவ நாணயமாக அமெரிக்க டொலர் ஆதிக்கம் செலுத்துகிறது எனக்கூறும் ஆசிரியர், சீனா மற்றும் யூரோ நாணயங்களின் புதிய எழுச்சி இருந்தபோதிலும், எந்த ஒரு நாணயமும் அமெரிக்க டொலருக்கு சமமான காத்திரமான சவாலை இதுவரை ஏற்படுத்தவில்லை என சுட்டிக்காட்டியுள்ளார்.

உலக நாடுகள் பலவும் அவற்றின் வெளிநாட்டு இருப்பு, கடன் பெறுதல் சந்தைப்படுத்தல் வர்த்தகம் ஆகியவைக்கு அமெரிக்க டொலரையே பெரிதும் சார்ந்துள்ளன. இதனால் அமெரிக்க பொருளாதாரக் கொள்கைகள் - குறிப்பாக பெடரல் ரிசர்வ் வட்டி விகித மாற்றங்கள் என்பன அமெரிக்க டொலரில் தங்கியிருக்கும் ஏனைய நாடுகளுக்கு பெரும்பாலும் பாதகமான சூழ்நிலையையே தொடர்ச்சியாய் உருவாக்கும் என்பதே உண்மை என விளக்குகிறார்.

புவிசார் அரசியல் மாற்றங்கள் இருந்தபோதிலும், உலகில் டாலருக்கு நம்பகமான நாணய மாற்றீடுகள் மிகக் குறைவு. அரசியல் பிரிவினைகளால் யூரோ நாணயம் பலவீனமடைந்துள்ளது, சீன நாணயம் சுதந்திரமாக நாணய சந்தைகளில் மாற்ற முடியாதது. இவை தவிர இன்றைய 'கிரிப்டோகரன்சிகள்' நிலையற்றவை மட்டுமல்ல, அவை இன்னும் உலக சந்தையில் ஒழுங்குபடுத்தப்படாதவை. இந்தப் பிரச்சனைகளும் அமெரிக்காவுக்கு சாதாகமானவை என தெளிவுபடுத்தியுள்ளார்.

அமெரிக்க டொலரை மையமாகக் கொண்ட இந்த அமைப்பு உலகளாவிய நிதியின் உறுதியற்ற தன்மையையும் சமத்துவமின்மையையும் வளர்த்து டொலரை அதீதமாக நம்பியிருக்கும் பல உலக நாடுகளுக்கும் - ஏன் அமெரிக்காவிற்கும்கூட நீண்டகால ரீதியில் பாரிய பாதிப்பை ஏற்படுத்தக்கூடும் எனவும் எச்சரிக்கிறார்.

அமெரிக்காவின் கட்டுமீறிய அதிகாரப் போக்கும் அதிகப்படியான சலுகை நாடலும் வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும்கூட எவ்வாறு நிதி இருப்பின் உறுதியற்ற தன்மையைத் தூண்டும் என்பதை அவர் இந்த நூலில் சுட்டிக் காட்டுகிறார் - 2015 முதல் அமெரிக்க டொலரின் எழுச்சியை விளக்கி டொலரின் ஆதிக்கத்திற்கு வழிவகுத்த முக்கிய காரணிகளை இனங்கண்டு, இன்று அது எதிர்கொள்ளும் அபாயங்களையும் விளக்கி புதிய நாணய மாற்றங்களுக்கு உலகம் விரைவில் தயாராக வேண்டும் என்பதை நோக்கி சிந்தனையை தூண்டியுள்ளார். யப்பானிய, சீன, யூரோ நாணயங்களின் நிலைகள் இன்னும் டிஜிட்டல் நாணய சொத்துக்கள் போன்றவையிலிருந்து எழும் சவால்களை எவ்வாறு எதிர்கொள்வது என்பதையும் விளக்கி உரைக்கின்றார்.

பணவீக்கம் மற்றும் வட்டி விகித மாற்றங்களுக்கு ஏற்ப டொலரை பாதிக்கும் பொருளாதார சக்திகளில் தேர்ச்சிபெற்று, நாடுகள் பொருண்மிய அபாயங்களைக் குறைப்பதற்கான அல்லது தவிர்ப்பதற்கான பல உத்திகளை நூலில் தந்துள்ளார். புவிசார் அரசியல் தாக்கங்களை ஆராய்ந்து, உறுதியற்ற அரசியல் தன்மை, வர்த்தக மோதல்கள் மற்றும் புதிய உலகளாவிய சக்தி நாணயச் சந்தைகளை எவ்வாறு மறுவடிவமைக்கின்றன என்பதை கோடிட்டுக்காட்டி, வேகமாக மாறிவரும் உலகளாவிய பொருளாதாரத்தை எதிர்கொள்ளும்போது நாடுகளின் நிதி நிலமை எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்கான விரிவான அணுகுமுறையை உருவாக்க வேண்டியதன் தேவையையும் வலியுறுத்தி வங்குரோத்து நிலையை அடையாமல் சில நாடுகள் தமது நிதி மீள்தன்மையை உருவாக்க வேண்டியதன் தேவைகளை விபரித்து எச்சரித்துள்ளார்.

உலக நிதியத்தில் அமெரிக்க டொலரை முற்றாக மாற்றீடு செய்ய வேறு எந்தக் நாணயமும் தற்போது தயாராக இல்லை. எனவே தொடர்ந்து முதலிடத்தில் டொலர் நிலைத்தாலும் அது முன்பு இருந்ததைப் போல தனித்துவமாக இருக்காதென்பதே ஆசிரியரின் முடிவான கருத்து.

மார்க் கானி தலைமையிலான கனடிய புதிய அமைச்சரவை 28 அமைச்சர்கள் - 10 ராஜாங்க அமைச்சர்கள்

Mark Carney unveils new cabinet that drops some Trudeau - era ministers, moves others!

In a major overhaul, Prime Minister Mark Carney unveiled a new and bigger cabinet last month that is replete with fresh faces — and some familiar ones — and designed to refocus the Liberal government towards the new leader's priorities during the trade crisis with the United States.

It was also an opportunity to turn the page on the Justin Trudeau era, with several high-profile Liberal ministers from recent years getting shuffled, and some getting dumped from cabinet, while new members were appointed to key positions and a series of junior 'secretary of state' roles that Carney has created.

Ten of the 28 members of the new cabinet were elected federally for the first time in April, while several of the ministers from Carney's March pre-election cabinet were dropped.

On top of that, Carney named 10 secretaries of state who will attend some cabinet meetings and are responsible for issues that range from rural development and defence procurement to seniors, crime, international development and sport.

Full list of New cabinet

Shafqat Ali – President of the Treasury Board

Rebecca Alty – Minister of Crown-Indigenous Relations

Anita Anand – Minister of Foreign Affairs

Gary Anandasangaree – Minister of Public Safety

Rebecca Chartrand – Minister of Northern and Arctic Affairs and Minister responsible for the Canadian Northern Economic Development Agency

François-Philippe Champagne – Minister of Finance and National Revenue

Julie Dabrusin – Minister of Environment and Climate Change

Sean Fraser – Minister of Justice and Attorney General of Canada and Minister responsible for the Atlantic Canada Opportunities Agency

Chrystia Freeland – Minister of Transport and Internal Trade

Steven Guilbeault – Minister of Canadian Identity and Culture and Minister responsible for Official Languages

Mandy Gull-Masty – Minister of Indigenous Services

Patty Hajdu – Minister of Jobs and Families and Minister responsible for the Federal Economic Development Agency for Northern Ontario

Tim Hodgson – Minister of Energy and Natural Resources

Mélanie Joly – Minister of Industry and Minister responsible for Canada Economic Development for Quebec Regions

Dominic LeBlanc – President of the King's Privy Council for Canada and Minister responsible for Canada-U.S. Trade, Intergovernmental Affairs and One Canadian Economy

Joël Lightbound – Minister of Government Transformation, Public Works and Procurement

Heath MacDonald – Minister of Agriculture and Agri-Food

Steven MacKinnon – Leader of the Government in the House of Commons

David J. McGuinty – Minister of National Defence

Jill McKnight – Minister of Veterans Affairs and Associate Minister of National Defence

Lena Metlege Diab – Minister of Immigration, Refugees and Citizenship

Marjorie Michel – Minister of Health

Eleanor Olszewski – Minister of Emergency Management and Community Resilience and Minister responsible for Prairies Economic Development Canada

Gregor Robertson – Minister of Housing and Infrastructure and Minister responsible for Pacific Economic Development Canada

Maninder Sidhu – Minister of International Trade

Evan Solomon – Minister of Artificial Intelligence and Digital Innovation and Minister responsible for the Federal Economic Development Agency for Southern Ontario

Joanne Thompson – Minister of Fisheries

Rechie Valdez – Minister of Women and Gender Equality and Secretary of State (Small Business and Tourism)

Secretaries of State:

Buckley Belanger – Secretary of State (Rural Development)

Stephen Fuhr – Secretary of State (Defence Procurement)

Anna Gainey – Secretary of State (Children and Youth)

Wayne Long – Secretary of State (Canada Revenue Agency and Financial Institutions)

Stephanie McLean – Secretary of State (Seniors)

Nathalie Provost – Secretary of State (Nature)

Ruby Sahota – Secretary of State (Combatting Crime)

Randeep Sarai – Secretary of State (International Development)

Adam van Koeverden – Secretary of State (Sport)

John Zerucelli – Secretary of State (Labour)

மறைந்த திருத்தந்தையின் மாட்சியும் புதிய பாப்பரசரின் புரட்சியும்

கருணையின் இதயமாக இறைவனை உலகுக்கு எடுத்துரைத்து, இரக்க சிந்தையுடன் அனைத்தையும் மன்னித்து குணப்படுத்துவதே ஆன்மிக புதுப்பித்தல் என தனது பணிக்காலம் முழுவதுமே அதனை வாழ முயற்சி செய்த திருத்தந்தை பிரான்சிஸ் இவ்வாண்டு ஏப்ரல் 21ல் இறைவனடி சேர்ந்தார். வசதிமிக்க சுகபோக வாழ்வைத் துறந்து ஏழ்மையை தேர்ந்த துறவியான புனித பிரான்சிஸ் அசிசியாரின் வாழ்வினால் ஈர்க்கப்பட்ட போப் பிரான்சிஸ் எளிமை, நீதியுடன் வறியவர்களின் வாழ்வை உயர்த்துவதற்கு குரல் கொடுத்தவர்.

ஜோர்ஜ் மரியோ பெர்கோக்லியோ என்பது அவரது இயற்பெயர். 1936 டிசம்பர் 17ம் திகதி ஆர்ஜென்டினாவின் பியூனஸ் அயர்ஸில் ஒரு தொழிலாள வர்க்க இத்தாலிய குடும்பத்தில் பிறந்த இவரின் ஆழ்ந்த ஆன்மிகம் அவரது பாட்டி ரோசா அவர்களால் ஆற்றுப்படுத்தப்பட்டது என ஒருமுறை குறிப்பிட்டார்,



ஒரு வேதியியலாளராகப் பயிற்சிபெற்று சிறிது காலம் பணியாற்றியபின் 1958ல் இயேசு சபையில் குருவாக இணைந்தார். 1998ம் ஆண்டு பியூனஸ் அயர்ஸ் மறைமாவட்டத்தின் பேராயராக நியமனம் பெற்று, பின்னர் 2013ம் ஆண்டு உலகத் திருச்சபையின் 266வது பாப்பரசராக இலத்தீன் அமெரிக்க பெருநிலத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட முதற்திருத்தந்தை எனும் வரலாற்றுப் பெருமைக்குரிய மகத்துவமான ஒரு மானிடவாதி இவர்.

இரண்டாம் உலகப் போரின் அதிர்ச்சி, பனிப்போர் முதல் கோவிட்-19 தொற்றுநோயின் மனிதாபிமான சவால்கள் வரை, முக்கிய உலகளாவிய நிகழ்வுகளால் அவரது மானிடக் கண்ணோட்டம் வீரியம் பெற்றது. அகதிகளின் உரிமைகள், சூழல்சார் காலநிலை மாற்றம், பொருளாதார நீதி, போரற்ற உலகம், சுரண்டல் மற்றும் ஆயுதப்பெருக்கத்தை கண்டித்து அகற்றல், கடந்த கால அட்டூழியங்கள் மீண்டும் நிகழாமல் பாதுகாக்க வரலாற்றை மீட்டு நினைவுகளை வலியுறுத்துதல் என உலகப் பிரச்சனைகள் பலவற்றையும் சார்ந்து அடிக்கடி பேசியும் எழுதியும், வற்புறுத்தியும் வந்த பெருமனிதர்.

உலகப் பெருமதங்களுகிடையிலான நல்லுறவை ஊக்குவித்த அவர் 2021ம் ஆண்டில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை வத்திக்கானுக்கு வரவேற்று, ராஜதந்திர உறவுகளுக்கு அப்பால் வெளிப்படையான மத உரையாடலின் தேவை பற்றி அறிவுரை கூறியவர். அவரது மரணத்தை ஒட்டி இந்திய அரசு மூன்று நாட்கள் தேசிய துக்கத்தை அறிவித்தமை மத, கலாசார எல்லைகளுக்கு அப்பால் அவர் மீதுள்ள ஆழ்ந்த மரியாதையை எடுதுரைத்தது.

2015ம் ஆண்டு இலங்கையில் களனியாவிலுள்ள புத்த கோவிலுக்குச் சென்று, புத்த துறவிகளுடன் மதஉரையாடலில் ஈடுபட்டார். அபுதாபியில் 2019ல் மகாஇமாம் அகமது எல்-தாயெப்புடன் மனித சகோதரத்துவம் குறித்த ஆவணத்தில் இணைந்து கையெழுத்திட்டதன் மூலம் ஒரு புதிய வரலாற்று முக்கியத்துவம் மிக்க நல்லுறவை உருவாக்கினார். இது மதங்களுக்கிடையிலான சகிப்புத்தன்மை, மனிதநேயத்துடன் கூடிய அமைதியான சகவாழ்வை வலியுறுத்திய ஒரு பெருநிகழ்வாகவே கருதப்பட்டது.

இவரது மரணச் சடங்குகள் நிறைவேறி ஒரு வாரம் முடிந்த பின்பு புதிய தலைவரை தெரிவு செய்யும் நிகழ்வுக்காக கத்தோலிக்க திருச்சபையின் கருதினால்மார்கள் உரோமையில் ஒன்று கூடி இரகசிய வாக்கெடுப்பின் மூலம் புதிய திருத்தந்தையாக அமெரிக்காவின் சிக்காகோ மாநகரில் பிறந்த றொபர்ட் பிரான்சிஸ் பிரீவோஸ்ட் என்ற இயற்பெயர் கொண்ட பேராயரரை மே மாதம் 9ம் திகதி தெரிவு செய்தார்கள்.

இவர் போப் லியோ XIV என புதிய பெயரினைப் பூண்டு கத்தோலிக்க திருச்சபையின் 267வது பாப்பரசராக, மே 18, 2025ல் செயிண்ட் பீட்டர்ஸ் சதுக்கத்தில் திருப்பலிச் சடங்கில் அதிகாரப்பூர்வமாக பதவியேற்று தனது திருப்பணியைத் தொடங்கினார்.

1955ம் ஆண்டு பிறந்த போப் லியோ, புனித அகஸ்டின் சபையை சார்ந்த துறவி. 1980 முதல் 1990 வரை அவர் பெரு நாட்டில் ஏழைகள் மத்தியில் மறைப்பணியாற்றி பெரு நாட்டின் குடியுரிமையையும் கொண்டுள்ளார். அங்கு சிக்லாயோவின் மறைவட்ட ஆயராக மிகச் சிறப்புமிக்க பணி புரிந்தார். 2022ல் வத்திகானிலுள்ள ஆயர்கள் நியமனத் துறையின் தலைவராக மிக உயர்ந்த பதவியில் இவர் நியமிக்கப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பாப்பரச பணியின் பாரம்பரிய சின்னங்களான மீனவர் மோதிரம் மற்றும் ஆயரின் சால்வை ஆகியவற்றை இவருக்கு அணிவிக்கும் பதவியேற்பு விழாவில் அமெரிக்க துணைத் தலைவர் ஜே.டி. வான்ஸ் மற்றும் உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி போன்ற உலகளாவிய பிரமுகர்கள் உட்பட சுமார் 200,000 பேர் கலந்து கொண்டனர்.

தனது மறையுரையில், அமைதி, ஒற்றுமை மற்றும் சமூகப் பணி ஆகிய கருப்பொருட்களை அவர் பலமுறை வலியுறுத்தினார். பிளவுபட்ட உலகில் திருச்சபை நல்லிணக்கத்தின் கலங்கரை விளக்கமாக இருக்க வேண்டும் எனவும் வன்முறை, பாரபட்சம், பொருளாதார சமத்துவமின்மை உள்ளிட்ட சமகால உலகளாவிய சவால்கள் பற்றி பல உண்மைகளை முக்கியத்துவப்படுத்தி உக்ரைனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான அமைதிப் பேச்சுவார்த்தைகளுக்கு வத்திக்கான் ஒரு சாத்தியமான தளமாக முன்வர தாம் விரும்புவதையும் அவர் முன்மொழிந்தார்.

போப் லியோ பாரம்பரிய விழுமியங்களை சமகால சமூக நீதிக்கான போராட்டங்களுடன் இணைக்க முயலும் போக்கையே கடைப்பிடிப்பார், நவீன சமூகப் பிரச்சனைகளில் ஈடுபடும் ஒரு கூட்டிணக்க மத சமூகமாக திருச்சபையை கட்டமைப்பார் எனும் எதிர்பார்ப்பு நிறைய உண்டு.

Three Foods Diabetes Patients Must Eat Daily To Keep Blood Sugar Levels in Check

For those with diabetes, it is very important to manage your blood sugar levels at all times. Some of the best foods for people with diabetes are high-protein and low-sugar options—which regulate your glucose.

According to experts, figuring out the best foods to eat when you have diabetes does not have to be tough, though. Even though many times you may crave sweets, it is best to balance them out with a few foods that you can incorporate into your daily meals.

Cucumbers

Cucumbers are a must-have for summers, as they are super hydrating and loaded with nutrients that keep your body naturally cool. However, this humble fruit is also a beneficial part of a diabetes management plan. They are low in carbohydrates and calories and have a low glycemic index, which means they do not cause a rapid spike in blood sugar.

Cucumbers are also packed with nutrients and offer hydration, making them a good addition to a diabetic diet.

Studies say phytonutrients in cucumbers - low in carbohydrates and non-starchy—make them one of the most effective plants for not only reducing blood sugar levels but also lowering the risk of hypoglycemia during a blood sugar drop. For those with type 2 diabetes, cucumber may be a helpful addition to their diet to moderate blood sugar levels more effectively.

Bitter gourd

Bitter gourd keeps your blood sugar levels down due to its high content of charantin and polypeptide-p—both of which act like insulin—and momordicin, which enhances glucose uptake. According to experts, these compounds not only spike your insulin sensitivity but also help your body utilise glucose for energy and reduce post-meal sugar spikes.

Also, apart from being a great vegetable for diabetes management, karela is also packed with vitamins A and C as well as iron and has no sugar at all.

You can either eat it with rotis and rice or make a juice and have it every morning.

Drumsticks

Also known as moringa, drumsticks have many benefits for those with diabetes due to their potential to regulate blood sugar levels and improve insulin sensitivity. According to studies, drumstick extracts reduce blood glucose and increase insulin production.

Also, the low-glycemic nature of drumsticks and their high fibre content help aid in stabilising blood sugar levels.

Besides, isothiocyanates found in drumsticks also help reduce body weight and improve glucose tolerance. It is claimed that moringa plays a vital role in reducing the amount of sugar in the blood while also decreasing glucose and protein in the urine. Being naturally low in carbohydrates and packed with dietary fibre, drumsticks can be eaten as a standalone dish, mixed with dals, or made into soups, salads, and even paranthas.

(Courtesy: Times Now Digital)

Is dark chocolate a healthy dessert option for people with diabetes?

One of the most believed myths about people with type 2 diabetes is that all sweet are prohibited. So much so that on receiving your diagnosis, you might feel forced to say goodbye to all the post-dinner treats. However, it is important to understand that not all sweets are off-limits. Some sweets are safe for people with type 2 diabetes. One of these is dark chocolate and a moderate amount may even bring health benefits.

According to the American Heart Association, certain antioxidant components of dark chocolates have also been linked to a lower risk of heart disease and insulin resistance. But that does not give you the permission to overdo it. Remember, portion control is always the key.

Anna Simos, CDCES, MPH, a certified diabetes care and education specialist at Stanford Health Care's diabetes care program, while speaking to Everyday Health, said, "The antioxidants in chocolate help the body use its insulin more efficiently to help control blood sugar." She further explains, "This in turn helps lower blood sugar levels naturally and actually helps your body use your insulin. As a result, it helps decrease insulin resistance, which we see in type 2 diabetes."

கனகேஸ்வரி நடராஜா

பன்திறமைசாலிகள்
Multi - Talented People

மார்ச் மாத தகவல் இதழில் மதிப்புக்குரிய எழுத்தாளர் அ.முத்துலிங்கம் அவர்கள் பல்செயல் திறமைசாலிகள் பற்றி தமது வழமையான அங்கதச் சுவையோடு எழுதிய கட்டுரையைப் பலரும் படித்திருப்பீர்கள். ஒருவர் ஒரே நேரத்தில் பலவிதமான செயல்பாடுகளை நிறைவேற்றுவது பற்றியே அவர் எழுதியிருந்தார். முன்பு பத்து விடயங்களை அல்லது எட்டு விடயங்களை ஒரே நேரத்தில் செய்பவர்களை முறையே தசாவதானி, அட்டவதானி என்று அழைப்பார்கள்.

இன்று நேரமின்மையும், தேவையும் தொழில்சார் குடும்ப வாழ்க்கை முறைகளும் பலரையும் பன்திறமைசாலிகளாக ஆக்கிவிட்டது. சிலரிடம் இயற்கையாகவே பன்திறமைகள் இருந்திருக்கலாம். அண்மைய சர்வதேச மகளிர் தினத்தன்று ஒரு பெண் பல கைகளைக் கொண்டவளாக பல்வேறு தொழில்கள் செய்யும் காட்சி கணினி உலகில் உலா வந்தது. அவரின் ஒரு கையில் குழந்தை புட்டிப்பால் குடித்தபடி இருந்தது. இன்னொரு கை அவர் முன்னாலிருந்த மடிக்கணினியில் வேலை செய்தவாறிருந்தது. இன்னொரு கை காய்கறிகளை நறுக்கிக் கொண்டிருந்தது. இவ்வாறு பல கைகளும் ஒரே நேரத்தில் பல வேலைகளைச் செய்தன. இதனை மிகைப்படுத்தப்பட்ட ஒரு காட்சியாக கொள்ள முடியாது. ஏனெனில் இன்றைய குடும்பத் தலைவிகள் தங்கள் வேலைகள், குடும்பச் சுமைகளை சுமந்தவாறே இருக்கிறார்கள்.

இது மட்டுமன்றி இன்று பிள்ளைகள், பெரியவர்கள் அனைவருமே பன்திறமைசாலிகளாக விளங்குவதை எம்மால் காண முடிகிறது. இத்தனை திறமைகளும் இவர்களிடம் எவ்வாறு வந்தன என்று வியக்காமல் இருக்க முடியாது. பலவிதமான திறமைகள் எங்கே மறைந்திருந்தன என வியக்க வைக்கிறது. சந்தர்ப்பம், சூழ்நிலை, தேவைகளால் இவை பரிணமிக்கின்றன என நினைக்கத் தோன்றுகிறது.

எமது மாணவர் சமூகத்தை கவனிப்போம். சிறுவயதிலிருந்தே தங்கள் பாடசாலைகளில் தங்களிடம் காணப்படும் பல்வேறு திறமைகளை வெளிப்படுத்திக் காட்ட இங்கு சந்தர்ப்பங்கள் நிறைய உண்டு. பாடசாலைகளில் தலைமைத்துவப் பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் பொழுது, அல்லது பல்கலைக்கழக அனுமதிக்கு தங்கள் சுயவிபரக் கோவையை சமர்ப்பிக்கும்போதும், பின்னர் வேலைகளுக்கு விண்ணப்பிக்கும் போதும், அதற்கான நேர்முகப் பரீட்சைகளுக்குச் செல்லும்போதும் தங்களிடம் எவ்வகையான திறமைகள் உள்ளன என்பதை அவர்களே சமர்ப்பிக்க வேண்டியுள்ளது.

இதனால் சிறுவயதிலிருந்தே இவர்கள் தம்மிடம் காணப்படும் திறமைகளை விருத்தி செய்வதோடு நில்லாது அவற்றை வெளிக்கொணர்ந்து நிரூபிப்பதில் தீவிரமாக ஈடுபடுகிறார்கள். போட்டிகள் நிறைந்த இன்றைய பாடசாலை வாழ்க்கையில் குழந்தைகள் எதிர்நீச்சல் அடிக்க வேண்டியிருக்கிறது என்பதை நன்கு அறிந்துள்ளனர். அதனால் வகுப்பறைக் கற்பித்தலுக்கு அப்பாற்பட்ட வெவ்வேறு பயிற்சிகளுக்கு அழைத்துச் செல்வது கட்டாய கடமையாக மாறிவிட்டது. நடனம், சங்கீதம், விளையாட்டு, அறிவுசார் செயல்கள் என்று இவற்றை சொல்லிக் கொண்டே போகலாம். இன்றைய மாணவர்கள் இதனால் எத்தனையோ திறன்களை தமக்குள் வளர்த்துக் கொள்கின்றனர்.

கோடை காலத்தில் பல்வேறு அரங்கேற்றங்கள் இடம்பெறுவது வழக்கம். இவ்வாறான நிகழ்வுகளின் போது அந்தப் பிள்ளைகளின் திறமைகள் பற்றி எடுத்துக் கூறுகையில் இவர்கள் இந்த வயதுக்குள் எவ்வாறு இவ்வளவு பயிற்சிகள் பெற்றுள்ளனர் என்பது வியப்படைய வைக்கிறது.

கனடாவில் பெண்கள் வாகனம் ஓட்டுவது புதினமானதல்ல. வீட்டு வேலைகள், வேலைத்தல பணிகள், சமூக பொறுப்புகள் எல்லாவற்றிலும் தாராளமாக பங்குபற்றுகிறார்கள். தங்கள் வீடுகளை அழகாகவும், தூய்மையாகவும் வைத்திருப்பதோடு தோட்டங்களை பராமரிக்கிறார்கள், நன்றாக சமையல் செய்கிறார்கள், விருந்தினர்களை உபசரிக்கிறார்கள்.

தேகப்பயிற்சி நிலையங்களுக்குச் சென்று தங்கள் உடம்பை நேர்த்தியாகவும், சுகமாகவும் வைத்திருக்கிறார்கள். உடையலங்காரமும் அவ்வாறே. தங்கள் பிள்ளைகளையும் பல்வேறுபட்ட திறமைசாலிகளாக வளர்க்கிறார்கள். தொழில் நிமித்தம் பல நாடுகளுக்கும் பயணம் செய்கிறார்கள். அவ்வேளைகளிலும் வீட்டில் சகலதும் ஒழுங்காக இடம்பெற ஏற்பாடு செய்கிறார்கள்.

ஆண்களும் இவ்விடயத்தில் சளைத்தவர்கள் அல்ல. முன்னைய நாட்களில் வேலைக்கு போய் வந்ததோடு தமது கடமை முடிந்ததென இவர்கள் இருந்து விடுவார்கள். ஆனால் இன்று சமையல், பிள்ளை பராமரிப்பு, வீட்டினையும் வளவையும் துப்பரவு செய்தல், பொதுத்தொண்டில் ஈடுபடுவது, விடுமுறைக்குக் குடும்பமாக பல இடங்களுக்குச் செல்வது என்று இவர்களின் வாழ்க்கை முறையும் மாற்றமடைந்து விட்டது.

குறிப்பிட்டுச் சொல்வதானால் இன்றைய இளம் குடும்பங்கள் பெற்றோரின் உதவியையோ வேலைப்பணியாளர்களின் உதவியையோ நாடுவதில்லை. பல்வகைத் திறன்களையும் வளர்த்து அதில் வெற்றியும் காண்கிறார்கள்.

இங்கு வாழும் முதியோரும் பலவிதமான திறன்களைக் கொண்டுள்ளனர். வீடே கதி, படுக்கையே விதி என்று இவர்கள் வாழ்ந்த காலம் மலையேறி விட்டது. பிறர் தயவை நாடாது தங்கள் நாளாந்த வாழ்க்கையை தாமாகவே நடத்தும் திறன்களை இவர்கள் நன்றாகவே விருத்தி செய்கின்றனர். தொழில்நுட்பத்தை கையாளும் திறன்களை தொடர்ந்து கற்று வருகின்றனர்.

முதியோர் சங்கங்களின் ஆடல் பாடல் நிகழ்ச்சிகளில் கூச்சமின்றி பங்குபற்றுகிறார்கள். பொதுவாழ்க்கையில் தன்னார்வத் தொண்டர்களாக ஈடுபடுகின்றனர். வயது வித்தியாசமின்றி அனைவரும் பன்திறமைசாலிகளாக விளங்கும் ஒரு சமுதாயத்தையே இன்று நாம் காண்கிறோம்.



இரா. சம்பந்தன்

சங்க இலக்கியத்தின் சரிவுகள்!

ஒரு நாட்டிலே அதிக மருத்துவ மனைகள் தென்படுமானால் அங்கு நோயாளிகளும் அதிகமானவர்களாக இருக்க வேண்டும். அது போல ஒரு மொழியிலே அளவுக்கு அதிகமான நீதி நூல்கள் தோன்றுமானால் அந்த மொழியைப் பேசும் சமுதாயத்திலே நீதி தவறிய செயல்களும் அதிமாக இடம்பெற்று இருக்க வேண்டும்.

சங்க காலம் நிறைவுற்று சங்கத்தை மருவிய காலம் அரும்பியபோது தமிழிலே ஏராளமான அற நூல்களும் தோற்றம் பெற்றன. இயற்கையோடு ஒன்றுபட்டு உள்ளும் புறமும் தூய்மையான நெஞ்சோடும் உண்மையோடும் வாழ்ந்த சங்க மக்களின் பிற்காலம் எண்ணற்ற குற்றங்களுக்கு இடமளித்துச் சீர்குலையத் தொடங்கியபோது அதைச் சீர் செய்ய திருக்குறள், நாலடியார் போன்ற பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் தோன்றின.

சங்க மக்கள் இறுதியில் என்ன குற்றம் செய்தார்கள் என்பதற்கு குறுந்தொகைப் பாடலொன்று சிறந்த உதாரணமாகும். அது கடலும் கடல் சார்ந்த மீனவக் குடியிருப்புகளையும் உள்ளடக்கிய நெய்தல் நிலம். அதிலே ஒரு குடியானவனும் அவன் மனைவியும் அவர்கள் பெற்ற ஒரு இளம் வயது மகளும் ஒரு வீட்டில் வாழ்கின்றார்கள்.

ஒரு முறை அந்த மீனவன் மீன்பிடிக்க வள்ளம் எடுத்துச் சென்ற போது கடலிலே வாழ்ந்த சுறா மீன் ஒன்று அவனைத் தாக்கிக் கடித்துப் புண்ணாக்கி விட்டது. அன்று முதல் அவன் புண் ஆறும் வரை வீட்டில் இருந்து வருகின்றான். அவனுக்கு தொண்டு செய்து கொண்டு அவன் மனைவியும் வீட்டில் இருந்து விடுகின்றாள்.

பெற்றோர் இப்படித் துன்பத்தில் கிடக்கின்றார்களே என்று மகளுக்கு இயல்பான ஒரு கவலையும் வீட்டின் வறுமை நிலையும் நெஞ்சத்தில் எழுந்திருக்க வேண்டும். ஆனால் அவளுக்கு பெற்றார் வீட்டில் இருப்பது அவள் காதல் வாழ்வுக்கு தடையாகத் தோன்றுகின்றது. அப்பன் கடலுக்கு செல்லவும் அம்மா உப்பு விற்று வர வெளியே செல்வதுமாக இருந்த தனிமைப் பொழுதில் தன் காதலனை அழைத்துத் தன் வீட்டிலேயே வைத்திருந்து அனுப்பி வந்த அந்தப் பெண்ணுக்கு இப்போது அந்த வசதி கிடைக்கவில்லை.

இன்று அவள் தந்தை புண் ஆறி கடலுக்கு மீன் பிடிக்கச் சென்று விட்டான். தாயோ சமைப்பதற்கு அரிசி வாங்குவதற்காக உப்பை எடுத்துக் கொண்டு சந்தைக்கு வியாபாரம் செய்யப் போய்விட்டாள். உடனே அந்தப் பெண் தோழியிடம் ஓடிச் சென்று சொல்கிறாள்.

என் பெற்றவர்கள் வீட்டில் இல்லை. வருவதற்கு அதிக நேரமாகும். நீ அதிக தூரம் என்று மறுக்காமல் என் காதலனின் இருப்பிடத்துக்குச் சென்று எங்கள் வீட்டிலே யாருமில்லை. உடனே வந்தால் மிகவும் எளிதாக நாங்கள் சேர்ந்திருக்கலாம் என்று சொல்லு என்று கெஞ்சுகின்றாள். இந்தப் பாடல் குறுந்தொகையிலே 269வது செய்யுளாகத் தொகுக்கப்பட்டிருக்கின்றது. கல்லாடனார் என்ற புலவர் பாடியிருக்கின்றார்.

சேயாறு சென்று துனைபரி யசாவா
துசாவுநர்ப் பெறினே நன்றுமற் றில்ல
வயச்சுறா எறிந்த புண்தணிந் தெந்தையும்
நீனிறப் பெருங்கடல் புக்கனன் யாயும்
உப்பை மாறி வெண்ணெல் தரீஇய
உப்புவிளை கழனிச் சென்றனள் அதனால்
பனியிரும் பரப்பிற் சேர்ப்பற்
கினிவரி னெளியள் என்னும் தூதே.

எது நடைமுறையில் இருந்ததோ அதைப் பாடிவைத்து வருங்காலச் சமுதாயத்திம் ஒப்படைக்க வேண்டும் என்று நினைத்து கல்லாடன் பாடிய பாடலை சங்க இலக்கியத்துக்கு இழுக்கு என்று நினைத்துப் புறக்கணித்து விடாமல் குறுந்தொகை சுமந்து நிற்கின்றது. ஆண்கள் காம சுகத்துக்கு பொதுவாக முன்னிற்பார்கள் என்ற கருத்தைப் பின்தள்ளி ஒரு பெண்ணே அந்தச் சுகத்தைத் தேடி அலையும் காட்சியை சங்க இலக்கியம் எடுத்துப் பேசுகின்றது.

உண்மையில் பெற்றவர்கள் வீழ்ச்சி நிலையில் இருக்கும் போது வளர்ந்த இளம் பெண் அந்தத் துயரத்தை நீக்குவது எப்படி என்று சிந்தித்திருக்க வேண்டும். ஆனால் சேலை எங்கே காயும் நடையை எங்கே நிறுத்தலாம் என்ற இழிநிலை பற்றி இந்தப் பாடல் பேசுகின்றது. எத்தனையோ உயர்ந்த ஒழுக்க விழுமியங்களைப் பேசும் சங்கப் பாடல்களுக்கு இடையிலே இப்படியான பாடல்களும் ஆங்காங்கே காணப்படுகின்றன.

இப்படியான பாடல்கள்தான் திருக்குறள் போன்ற தீப்பிழம்புகள் தோன்றி தமிழர் வாழ்வியல் மாசுகளைப் பின்னைய நாளில் சுட்டெரிக்க வழிவகுத்திருக்கின்றன. குறுந்தொகையின் இந்தப் பாடலுக்கு எதிராக திருக்குறள் நிகழ்த்திய தாக்குதல்கள் பல உண்டு. குறிப்பாக ஒன்றைச் சொல்லலாம்

காதலனைப் பிரிந்து வீட்டிலே தனியாக இருக்கும் ஒரு பெண் தன் மனத்திடம் கேட்கின்றாள். வாழ்விலே வசதி இழந்து தாழ்நிலை ஒருவருக்கு வந்தால் நண்பர்களும் உறவினர்களும் விலகிப் போய் விடுவார்கள் என்று சொல்லுவார்கள். நானும் காதலனைப் பிரிந்து தாழ்ந்து எப்போதும் கவலையோடு இருப்பதால் இதுவரை காலமும் என்னோடு இருந்த என் மனமே நீயும் என்னை விட்டு என் காதலன் கூட ஓடிப் போகின்றாயா. சரி நீ வேண்டும் என்றால் போ. நான் அப்படியெல்லாம் செய்ய மாட்டேன்.

கெட்டார்க்கு நட்டாரில் என்பதோ நெஞ்சேநீ
பெட்டாங்கு அவர்பின் செலல்

(திருக்குறள் - நெஞ்சொடு புலத்தல் - குறள் 1293)

நான் காதலனைச் சந்திக்க வரமாட்டேன் என்றாலும் ஒன்றுதான். காதலனை என்னிடம் வா என்று கூப்பிட மாட்டேன் என்றாலும் ஒன்றுதான். இது குறுந்தொகை தாழ்த்திய ஒரு பெண்ணை திருக்குறள் உயாத்தில் தூக்கி வைத்த செயலாகும்.

தேசா தெய்வேந்திரன்

அமெரிக்க வரி கனடாவை உயர்த்துமா?

கனடாவின் தொழில்நுட்பத்திலிருந்து உணவுப் பொருட்கள் மற்றும் உற்பத்தித் தொழிற்சாலை - கள்வரை அனேகமான உற்பத்திகள் அமெரிக்காவுடன் இறுக்கமாக பின்னிப் - பிணைந்தவை. அமெரிக்காவையும் அதன் உற்பத்தியையும் கனடியர்கள் எப்போதும் பிரித்துப் பார்த்ததில்லை. உதாரணமாக வாகனத் தயாரிப்பை எடுத்துப்பார்க்கின் அதற்கான உதிரிப்பாகங்கள் கனடா, மெக்சிக்கோ, அமெரிக்கா ஆகிய நாடுகளில் தயாரிக்கப்பட்டு பின்னர் அநேகமாக இவற்றில் ஏதாவதொரு நாட்டில் இறுதியாகப் பொருத் - தப்பட்டு வாகனங்கள் விற்பனைக்கு வருகின்றன.

இதற்கு ஏற்கனவே வரிவிலக்கு வழங்கப்பட்டு இருந்ததால் இது Free Trade ஆக இருந்தது. இதன் காரணமாகத்தானோ என்னவோ கனடிய பெயரில் (Canadian brand) வாகனங்கள் உருவாக்கப்படவில்லை. வலைத்தளத்தில் இது தொடர்பாக ஆராய்ந்து பார்க்கையில் கனடாவில் மின்சார வாகனத் (Electric Vehicle) தொழிற்சாலை ஒன்று தென்பட்டது. இதனை மேலும் ஆழமாகத் தேடிப்பார்க்கையில் அந்தத் தொழிற்சாலைகூட வியட்நாம் நாட்டவருக்கு உரியதென தெரியவந்தது. இது அதிர்ச்சியாக இருந்தது.

பொம்பாடியர் போன்ற வானூர்தி, மின்சாரத்தில் இயங்கும் தொடருந்து போன்றவைகளை தயாரிக்கும் தொழிற்சாலைகள் மற்றும் இதற்கான தொழில்நுட்பம் கனடாவில் இருந்தும், இங்கு மின்சாரத்தால் இயங்கும் வாகனத் தொழிற்சாலை ஒன்றை ஏன் உருவாக்க முடியவில்லை என்ற கேள்வி எழுந்தது. கனடியர்கள் அதிகமாக அமெரிக்காவைச் சார்ந்து இருந்துவிட்டதால்தான் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கலாமென்று எண்ணுவதைத் தவிர்க்க முடியவில்லை.

கனடியர்கள் அதிகமாக அமெரிக்காவைச் சார்ந்துவிட்டதாலோ அல்லது சற்று அயர்ந்து - விட்டதாலோ இந்த நிலைமை என்ற கேள்வி எழுகின்றது.

கடந்த மாதம் நான் தென்கொரியாவுக்கு விடுமுறையில் சென்றபோது எமது சுற்றுலா வழிகாட்டி கூறிய விடயங்கள் என்னைப் பெருவியப்பில் ஆழ்த்தியது. ஒரு காலத்தில் தென்கொரியா கிட்டத்தட்ட வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டு அந்நாட்டு மக்கள் தங்களிடமிருந்த தங்கம் போன்ற விலை உயர்ந்த பொருட்களை அரசாங்கத்திடம் கொடுத்து, தங்களின் அயராத உழைப்பின் மூலமும், நேர்த்தியான அரசியல் தலைவர்களின் வழிநடத்தல் மூலமும் 1960களிலிருந்து இன்று தம்மை மிகவும் உயர்ந்த நிலைக்குக் கட்டியெழுப்பியுள்ளனர் என்ற தகவலை என்னால் பெறமுடிந்தது.

இங்கு தெரிவிக்கப்பட்ட தரவுகள் எவ்வளவுக்கு சரியானது என ஆராய்ந்து பார்த்தேன். நாம் அன்றாடம் பாவிக்கும் பல இலத்திரனியல் பொருட்கள் இங்குள்ள தொழிற்சாலைகளில் தயாரிக்கப்பட்டவை என அறிந்தது என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. SamSung, Magnachip, Semiconductor, Partron Cooperation, SK - Hynix, Symtech என்று தென்கொரிய தொழிற்சாலைகளின் பட்டியல் நீண்டுகொண்டே போகிறது.

இவை தவிர, வாகனத் தயாரிப்பில் Hyundai, KIA, Genesis போன்ற வாகனங்கள் இங்கு உருவாக்கப்படுபவை என்பதை கனடாவில் வாழும் பலரும் அறிந்திருப்ப - தில்லை. தென்கொரியா ஒரு சிறிய நாடு. கனடாவை ஒத்த சனத்தொகையைக் கொண்டது. இவர்களால் தொழில்நுட்பத்திலும் இலத்திரனியலிலும் இத்தனை சாதனைகளைப் படைக்க முடியுமானால் கனடியர்களால் இது ஏன் செயற்படுத்த முடியாதுள்ளது.

கனடாவில் பெருமளவு கனிமங்கள் இருந்தும் நாம் ஏன் அவற்றை முழுமையாக உற்பத்திக்கு உபயோகப்படுத்துவதில்லை. உதாரணத்துக்கு இரும்பு போன்ற உலோகத்துக்கு அமெரிக்கா வரி விதிப்பதால் கனடியர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லாமல் போகுமென நினைக்கும் நாம், அந்த உலோகத்தை நாமே பயன்படுத்தி வேலைவாய்ப்பை ஊக்குவிப்பதோடு பெருமளவு பணத்தையும் சேமிக்க முடியும்.

Dish Washer, Washing Mechine, Refrigerator, Electric Car போன்றவை- களை கனடாவிலேயே தயாரிக்கக்கூடிய மூலப்பொருட்கள் அவைகளை இன்னமும் இறக்குமதி செய்து கொண்டே இருக்கும் நிலை தொடருகிறது. இங்கு கவலைக் - குரிய விடயமாகப் பார்க்கப்படுவது Carbon Tax எனப்படும் வரியை நாம் எல்லோரும் செலுத்தியிருந்தோம். ஆனால் எம்மால் முழு அளவில் வாகனங் - களுக்கான பற்றரிகளை தயாரிக்கும் தொழிற்சாலைகளை ஏன் இதுவரை நிறுவ முடியவில்லை. இதேபோல் சூரிய ஒளியில் இயங்கும் (Green House Farms, Green Energy Production) 365 நாள் உற்பத்தி தரக்கூடிய விளைநிலங்கள் இருந்தும் அவை பயன்படுத்தப்படவில்லை.

இப்போது அமெரிக்கா விதித்திருக்கும் வரிப்பிரச்சனைக்கான தீர்வு என்ன? அமெரிக்காவுடனான வர்த்தக மற்றும் நட்புறவை முடிந்தளவில் மேம்படுத்திக் - கொண்டு, சமவேளையில் கனடா தனக்கான உற்பத்தியை மேற்கொண்டு மற்றைய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வர்த்தகத்தை ஏற்படுத்தலாம். இதற்காக தற்போதைய கனடிய பிரதமரின் Access Canada Infrastructure Development Plan வரவேற்கத்தக்கது. கனடாவின் பல மாகாணங்களுக்கும் மாநகரங்களுக்கும் இத்திட்டம் தொழில்வாய்ப்பைக் கொண்டுவரும் வாய்ப்பைக் கொடுக்கும்.

கனடாவில் West to East போக்குவரத்து மற்றும் Energy Trnsfer கட்டமைப்பு இருக்குமாயின் வாகன உற்பத்தியின் பாகங்கள் இங்குள்ள பல மாகாணங்களில் தயாரிக்கப்பட்டு Final Assembly யையும் இங்கேயே மேற்கொள்ள முடியும். இது வெற்றியளிப்பதற்கு கனடிய மத்திய அரசு, மாகாண அரசுகள் மற்றும் மாநில ஆட்சி அனைத்தும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டியது இன்றைய காலத்தில் அவசியமாகிறது.

இவைகள் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்படுமானால் கனடாவின் மின் உற்பத்தி குறுகிய காலத்தில் மேம்படும். இதனால் கனடாவில் உள்நாட்டு வேலைவாய்ப்பு அதிகரிக்கும். அரசியலுக்கு அப்பாற்பட்டதாக எங்கள் நாடு என்ற சிந்தனை ஏற்படின் தென்கொரியா போன்று கனடா பிரகாசிக்கும். இதனையிட்டு இங்கு வாழும் அனைத்து மக்களும் பெருமைப்பட முடியும்.

கனடா மூர்த்தி

கண்டதை மீண்டும் சொல்லுகிறேன் - 23

முதியோர் இல்லங்கள் குறித்தும், அதில் அனுமதிக்கப்பட்டிருந்த எனது அம்மா குறித்தும் இந்தத் தொடரில் கடந்த சில மாதங்களாக தொடர்ச்சியாக எழுதி வருவதை இந்த இதழுடன் நிறுத்திக் கொள்ளலாம் என எண்ணுகிறேன். அம்மாவின் அஸ்தி மூன்று பகுதிகளாக கனடாவில் பிறிம்லி ஒன்ராறியோ ஏரிக் கடலிலும், யாழ்ப்பாணத்தின் திருவடிநிலை கடலிலும், இந்தியாவின் கங்கை நதியிலும் கரைக்கப்பட்டாயிற்று.

மரணம் ஒரு குடும்பத்தில் ஏற்படுத்தும் தாக்கம் சொற்களால் புரியவைக்க முடியாதது. குறிப்பாக அம்மாமாரின் மரணத்தோடு பல குடும்பங்களிலிருக்கும் பாசப்பிணைப்புக்கள் பெருமளவு தளர்ந்து விடுகின்றன. பல சந்தர்ப்பங்களில் அறுந்தும் போய்விடுகின்றன. ஆயினும் சம்பிரதாயத் - திற்காகவும், மனச்சாந்திக்காகவும் ஆண்டுதோறும் செய்யப்படும் மரணத்திற்குப் பிந்தைய சடங்குகள் அறுந்துபோகும் குடும்பப் பிணைப்புக்களை மீண்டும் ஏதோ கொஞ்சம் ஒட்ட வைக்கின்றன.

ஆத்திகரோ - நாத்திகரோ, நம்பிக்கை இருக்கிறதோ - இல்லையோ நாம் வாழும் சமூகத்திற்காக சடங்கு, சம்பிரதாயங்களைச் செய்ய வேண்டிய கடப்பாடு நமக்கு வந்துவிடுகிறது. நம்பிக்கைகள் ஒருபுறமிருந் - தாலும், மறுபுறத்தில் எமது மனதிலிருக்கும் குற்ற உணர்வுகளில் சிலவற்றைக் கடந்து போவதற்காகவே சடங்குகள் செய்யப்படு - கின்றனவோ என்றும் நான் நினைப்பதுண்டு.

தனது இறுதிக் காலத்தில் அம்மா எனது வீட்டில்தான் வாழ்ந்து வந்தார். இருந்தபோதும், “தாய்க்கு கொள்ளி வைப்பது இளைய மகன்தான்” என்ற சம்பிரதாயப்படி ஆத்ம சாந்திப் பூஜைகள், துடக்குக் கழிவுகள் எல்லாம் கொள்ளி வைத்த என் தம்பியின் வீட்டிலே நடத்தப்பட்டன. எனது வீட்டில் எந்தப் பூஜையும் நான் செய்யவில்லை. துக்கம் விசாரித்த என் உறவினர்களில் ஒருவர், அதற்கு கடுமையாக விசனம் தெரிவித்தார். “பூசையைச் செய்துவிடு.. இல்லையேல் அம்மாவின் ஆன்மா உன் வீட்டையே சுற்றிச் சுற்றி வரும். உன் வீட்டிலேயே இருக்கும்” பயமுறுத்துவதுபோல சொன்னார். அதற்கு நான், “சரி.. அதுவும் நல்லதுதானே.. நான் ஏன் அம்மாவின் ஆன்மாவைத் துரத்திவிட வேண்டும்? ஐ லவ் மை மதர்.. ஆன்மாவாக அவர் என்னோடு இதே வீட்டிலேயே இருப்பாரென்றால் இருக்கட்டுமே. மகிழ்ச்சி.” என்று மறுத்து விட்டேன். எனது இந்த நினைப்பு ஒரு “மூடநம்பிக்கை” என்று யாராவது சொன்னால் அதை ஏக மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்கிறேன்.

அதேபோல இறுதிக் கிரியைகளின்போது அம்மாவின் பூதவுடலை தங்க நகை-களை அணிவித்து அலங்கரிக்க வேண்டும் என்று சிலர் விடாப்பிடியாக நின்றார்கள். அம்மா ஆசைப்படுவாராம். “தங்க நகைகளை அணிவியுங்கள். உடலை எரியூட்டப் போகுமுன்னர் நகைகளைக் கழற்றித் தந்துவிடுவார்கள்” என்றும் சொன்னார்கள். நான் மறுத்துவிட்டேன். நகைகளை அணிவித்தால் பிறகு ஏன் கழற்ற வேண்டும்? எரியூட்டும் நேரம் நெருங்க நெருங்க தங்க நகைகளைக் கழற்ற வேண்டுமே என்ற பதற்றம் வேறு இருக்குமல்லவா. அந்த சோகமான நேரத்தில் “யார் கழற்றப்போகிறார்கள், திருப்பித் தருவார்களா இல்லையா” என்ற மாதிரியான நினைப்பெல்லாம் தேவையா? அவ்வளவு நேரமும் உடலை ஜொலிக்கும் அலங்காரத்துடன் வைத்துவிட்டு அந்த கடைசி நிமிடத்தில் மூளியாக்கப்போகிறோமா? ஆட்சேபித்தேன். கடைசியில் பூதவுடலுக்கு ஐம்பொன் நகைகளை அணிவித்தோம். அவற்றில் எதையும் கழற்றாமல் அப்படியே அக்கினியுடன் சங்கமமாக அனுப்பிவைத்தோம்.

ஆத்ம சாந்திக்காகப் படையல் இட்டதையும் இந்த இடத்தில் குறிப்பிடவேண்டும்போல இருக்கிறது. அம்மாவிற்கு விருப்பமான சகல உணவு வகைளையும் படைக்க வேண்டும் என்பதுதான் அந்தச் சடங்கின் நோக்கம். பட்டியலில் சைவ உணவும் கூடவே அசைவ உணவும் அடங்கியிருந்தன. அம்மா தனது கடைசிக் காலங்களில் அசைவ உணவைப் பிடிவாதமாக தவிர்த்து ஒரு தீவிர வெஜிடேரியனாகவே இருந்தவர். ஆதலால், படையலுக்கு முட்டையும், கோழியும், இறைச்சியும், மீனும் வைப்பது பொருத்தமானதா - யிருக்குமா என்ற கேள்வியை எழுப்பினேன். அசைவம் தேவையில்லை என்றேன். ஆனால் இம்முறை எனக்குத் தோல்வி. சம்பிரதாயம் எனச் சொல்லி அசைவ உணவும் படைக்கப்பட்டது.

அம்மாவின் இறுதி அஞ்சலிக்கு பலரும் வந்திருந்தார்கள். அன்றிருந்த மன - நிலையில் அஞ்சலி செய்ய வந்த எல்லோரையும் மனதில் பதிய முடியவில்லை. அதனால், 31 நாள் நிறைந்தபின் அந்தியேட்டிக்கும் மதிய உணவிற்கும் வருமாறு அழைக்க வேண்டி வந்தபோது, இறுதி அஞ்சலிக்கு வந்த பலரையும் மறந்துவிட்டேன். மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த கையொப்பமிடும் புத்தகம் பேருதவியாக இருந்தபோதும், அதில் கையொப்பம் இடாமல் போனவர்களில் பலரை அந்தியேட்டிக்கு அழைக்க முடியாமல் போய்விட்டது. அழைக்க முடியாமல் போய்விட்ட உறவினர்கள் பின்னர் அது குறித்துக் குறை சொல்ல அது பெரும் சிக்கலாக மாறிவிட்டது. நான் வேண்டுமென்றே அதைச் செய்யவில்லை என்பது தெரிந்திருந்தாலும், சில நேரங்களில் சில மனிதர்கள்...

ஆத்ம சாந்திப் பூசைகள், கிரியைகள் - இவையெல்லாம் எதற்காக உருவானவையோ தெரியாது. இருந்தாலும் அவற்றைச் சரிவரச் செய்ய வேண்டும் என்பதில் ஒரு பழமைவாதியாக எனக்கு மாற்றுக் கருத்தில்லை. அப்படி இருக்க, அவையெல்லாம் பிராமணர்கள் தமது பிழைப்புக்காக நம்மை தூண்டிவிட்டு செய்ய வைப்பவை என்ற கருத்தை கொண்டவர்களாக நம்மவர்களில் பெரும்பான்மையோர் இருப்பதைக் கவனிக்கிறேன்.

போதாக்குறைக்கு ‘பிராமணியள் செத்தவீட்டை வைத்தும் பிழைக்கிறாங்கள். ஏராளமா தட்சணை கேக்கிறாங்கள்’ என்று இளக்காரமாகச் சொல்பவர்களும் இருக்கிறார்கள். உண்மையில், நாம் கேட்பதால் சடங்குகளைச் செய்ய மதகுருவாக வருபவர்களே அவர்கள். எமது மதகுருக்களை நாமே இப்படி இழித்துச் சொல்வதென்பது கேவலமான, மோசமான, இழிவான செயலாகும். அதை ஏன் கேவலமான, மோசமான, இழிவான செயல் என்று விமர்சிக்கிறேன் என்பதை சிந்தித்துப் பார்க்குமாறு கூறி இதை நிறுத்திக் கொள்கிறேன்.

அ. முத்துலிங்கம்

முதல் மலர்

அந்தப் பெண்ணுக்கு தொலைபேசி தகவல் விட்டேன். பதில் இல்லை. பின்னர் மின்னஞ்சல் அனுப்பினேன். அதற்கும் பதில் கிடைக்கவில்லை. அவருடைய தாயார் இங்கிலாந்தில் இருந்தார். அவரை தொடர்புகொண்டு பேசினேன். அவர் தகவலை மகளுக்கு சொல்வதாக எனக்கு வாக்களித்தார். பின்னர் அந்தப் பெண் தொடர்பு கொண்டார். பெயர் சிறீநிதி பிரகாஷ். இரண்டு கேள்வி கேட்டால் ஒன்றுக்கு பதில் சொன்னார்.

உலகின் முதல் இடத்தில் இருக்கும் பல்கலைக் - கழகமான ஹார்வர்டில் உலகின் மூத்த மொழியான தமிழுக்கு இடமில்லை. அந்தக் குறையை நீக்க 2015ம் ஆண்டு அமெரிக்காவில் வதியும் மருத்துவர் விஜய் ஜானகிராமனும், மருத்துவர் சுந்தரேசன் சம்பந்தமும் ஆளுக்கு அரை மில்லியன் டொலர்கள் நல்கி ஹார்வர்டில் தமிழ் இருக்கை அமைக்கும் பணியை தொடங்கி வைத்தார்கள். தேவையான மொத்த தொகை ஆறு மில்லியன் டாலர்கள். இதை மூன்று வருடங்களில் திரட்டவேண்டும்.

தமிழ்நாடு அரசு தன் பங்காக 1.5 மில்லியன் டொலர்களை வழங்கியது. உலகத்தின் பல பாகங்களிலும் இருந்து பணம் வந்து குவிந்து மூன்று வருடம் முடிவதற்கு முன்னரே ஆறு மில்லியன் டொலர் நிதி சேர்ந்தது. உலகத் தமிழ் மக்களுக்கு கிடைத்த மாபெரும் வெற்றி என்றே இதைச் சொல்லலாம். 27 நாடுகளில் இருந்து 9000 பேர் பணம் செலுத்தி உருவானதுதான் இந்த தமிழ் இருக்கை. இது ஒருவருக்கு சொந்தமானது அல்ல, உலக மக்களுக்கு சொந்தமானது.

நன்கொடை அனுப்பியவர்கள் அடிக்கடி தொலை - பேசி வழியாக விசாரித்தார்கள். 'யார் பேராசிரியர்? எப்பொழுது அவர் நியமனம் பெறுவார்?' போன்ற கேள்விகள். செப்டம்பர் 2022ல், தமிழ் பேராசிரியராக மார்த்தா ஆன் செல்பி நியமனம் ஆனார். மறுபடியும் கேள்விகள் எழுந்தன. 'மாணவர்கள் அனுமதி தொடங்கிவிட்டதா? பி.எச் டி செய்யப்போகும் முதல் மாணவர் யார்?'

சிறீநிதி இங்கிலாந்தில் பெற்றோருடன் வசித்தார். அமைதியான பெண். புத்தகங்கள்தான் அவர் உலகம். பிபிசி சானல் 4 நடத்திய British Child Genius போட்டியில் குழந்தை சிறீநிதி கலந்துகொண்டு முதல் பரிசுக்கான கோப்பையை வென்றவர். உலக Scrabble சாம்பியனும் அவர்தான். சீட்டுக்கட்டில் 52 சீட்டுகளைக் கலைத்துப் போட்டால் அவற்றை மறுபடியும் அதே ஒழுங்கில் சொல்வார். அத்தனை ஞாபக சக்தி. ஆனால் அதுபற்றி எல்லாம் பேசமாட்டார். தவிர்த்து விடுவார்.

சிறு வயதிலிருந்தே சிறீநிதிக்கு மொழிகள் கற்பதில் ஆர்வம். தானாகவே பிரெஞ்சு, இத்தாலியன், ஜேர்மன் மொழிகளைக் கற்றுக் கொண்டார். கோவிட் காலத்தில் அவருடைய தாயார் சிறீநிதிக்கு முறையாகத் தமிழ் கற்பித்தார். அவருக்கு தமிழ் இலக்கியத்தை தொடர்ந்து படிக்கவேண்டும் என்ற விருப்பம் அப்பொழுதுதான் ஏற்பட்டது.

செப்டம்பர் 2024ல் ஹார்வர்ட் தமிழ் இருக்கையில் தமிழ் கற்க ஏற்றுக்கொள்ளப்பட்ட முதல் மாணவி சிறீநிதி. 'London School of Economicsல் தத்துவம், அரசியல், பொருளாதாரம் ஆகிய பாடங்கள் எடுத்து B.Sc.(Hons) முதல் வகுப்பில் வெற்றி பெற்றிருக்கிறீர்கள். படிப்பை அதே துறையில் தொடராமல் திடீரென்று தமிழில் பி.எச்.டி செய்யவேண்டும் என்ற முடிவை எப்படி எடுத்தீர்கள்?' என்று கேட்டேன்.

'அம்மா தமிழ் படிக்கும் ஆசையை தூண்டினார். David Shulman எழுதிய Tamil: A Biography நூலைப் படித்தேன். தமிழின் தொன்மையையும், ஆழத்தையும் அழகையும் உணர முடிந்தது. படிக்கப் படிக்க எனக்குப் போதவில்லை. இனி தமிழ்தான் என் உலகம் என்று தீர்மனித்தேன். தமிழிலே முனைவர் பட்டம் பெற்று ஆராய்ச்சியில் ஈடுபடுவது என் வாழ்வின் லட்சியம்' என்றார்.

'உங்கள் எதிர்காலத்தை எப்படிப் பார்க்கிறீர்கள்?'

'கல்வித்துறைதான் என் தெரிவு. பழைய இலக்கியங்கள் கற்கவும், ஆராய்ச்சி செய்யவும், மொழிபெயர்க்கவும், கருத்துகளைக் கூறவும் விரும்புகிறேன். தமிழ் இலக்கியம் மட்டுமில்லை, ஆங்கில, ஐரோப்பிய இலக்கியங்களையும் சேர்த்துத்தான்.'

"சங்கத் தமிழ் படிக்க ஆரம்பித்து விட்டீர்களா?'

"கடந்த தவணை குறுந்தொகை படித்தேன். இப்பொழுது சேக்ஸ்பியரையும் கம்பரையும் ஒப்பு நோக்கி ஆய்வுசெய்வதில் ஆர்வமாக இருக்கிறேன்".

பொஸ்டனில் ஓர் உணவகத்தில் சந்தித்தோம். அவர் மசாலா தோசைக்கு ஆணை கொடுத்தார். நான் இட்லிக்கு சொன்னேன். சிறிய உதவித் தொகையில் படிக்கும் அந்தப் பெண் என்னுடைய உணவுக் - கும் தானே பணம் கொடுப்பதாகச் சொன்னார். 'அது எப்படி? நீங்கள் என்னுடைய விருந்தாளி என்று நான் சொன்னேன்.' என்ன அடக்கம். என்ன பண்பு.

பொலீவியா நாட்டில் ஓர் அரிய தாவரம் உண்டு. அதன் பெயர் புயா ராய்மொண்டி. இது நூறு வருடத்துக்கு ஒருமுறை பூக்கும். பச்சை, வெள்ளைப் பூக்கள் செம்மஞ்சள் காம்புகளில் 30 அடி உயரத்துக்கு நிமிர்ந்து நிற்கும். ஒருவர் வாழ்நாளில் ஒருமுறை மட்டுமே இந்தப் பூவை பார்க்க முடியும் என்று சொல்கிறார்கள்.

ஹார்வர்ட் தமிழ் இருக்கையில் முதல் மலரும் மாணவிக்காக 388 வருடங்கள் உலகம் காத்திருக்க வேண்டியிருந்தது.

முனைவர் பால. சிவகடாட்சம்

படித்ததும் கேட்டதும் - 83

காதலும் காமமும்

காதலுக்கும் காமத்துக்கும் இடையிலான நுண்ணிய ஆனால் ஆழமான வேறுபாட்டை விளக்குவதற்குப் பல்வேறு அறிஞர் பெருமக்கள் முயற்சி எடுத்து வந்துள்ளனர். மிக நீண்டகாலமாக ஆராயப்படும் விடயம் இது.

"அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே" என்று சங்கத்தமிழ்ப் புலவர் கூறியதை ஆதாரமாகக் கொண்டு காதல் என்பது மனித குலத்துக்கே உரிய ஓர் அற்புதமான உணர்வு என்று மேலோட்டமாகக் கூறிவிடலாம். எனினும் பறவைகள் விலங்குகள் போன்ற ஏனைய உயிரினங்கள் காதல் கொள்வதை உறுதிப்படுத்த முடியவில்லை என்றும் ஆய்வாளர்கள் கூறலாம்.

காதல் என்பது ஓர் உள்ளுணர்வு. தூக்கணாங்கு குருவிக்கு எப்படிக் கூடுகட்டுவது என்பதை எவரும் சொல்லிக் கொடுத்ததில்லை. அதுபோலத்தான் காதல் உணர்வும் உள்ளுணர்வில் பதியப்பெற்ற ஒன்று.

காமமும் ஒருவர் சொல்லிக்கொடுத்து வருவதில்லை. ஆனால் அனைத்து உயிர்களுக்கும் பொதுவாகத் தோற்றுவிக்கப்பட்ட ஓர் இயற்கை நியதியே காமம். உயிரினம் ஒன்றின் இருப்புக்கு அத்தியாவசியமானது என்று இயற்கை தோற்றுவித்ததே காமம். காமம் சுயஇன்பத்தைத் தரக்கூடிய ஒரு தற்காலிக ஈர்ப்பு மாத்திரமே. அது ஆண் பெண் என்னும் உடல் வேறுபாட்டை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது. காமத்தால் அலைக்கழிக்கப்படுபவர்களுக்கு வெட்கம், மனச்சாட்சி, மற்றவர் உணர்வை மதிக்கும் தன்மை கிடையாது. தோன்றிய வேகத்திலேயே மறைந்துவிடும் அற்ப நேர ஆசை.

கடந்த மாதம் வெளியான இக்கட்டுரையில், அதற்கு முன்னைய மாத ஆங்கில மொழிபெயர்ப்பு தவறுதலாக வெளியானதால், சரியான மொழிபெயர்ப்புடன் அக்கட்டுரை இங்கு மீளவும் முழுமையாக பிரசுரிக்கப்பட்டுள்ளது

காமத்தின் விசேட குணம் என்பது தனது நிலையையோ எதிர்பாலின் நிலையையோ எள்ளளவும் பொருட்படுத்தாது தனது இச்சையைத் தீர்த்துக்கொள்ளும் ஒரு வெறித்தனமான ஆசையாகும். காம வயப்பட்ட ஒருவரின் இயல்பைப் புரிந்து கொள்வதற்கு ஒரு நாயின் ஆசையை எடுத்துரைக்கின்றார் ஒரு புலவர். பெயர் அறியப்படாத இப்புலவரின் பாடல் விவேக சிந்தாமணி என்னும் பாடல் திரட்டில் இடப்பெற்றுள்ளது.

நாய்க்கு உடலில் எந்தப் பாகத்தில் அடிபட்டாலும் ஒரு காலைத் தூக்கியபடிதான் ஓடும் என்பார்கள். அப்படி ஓடிக்கொண்டிருக்கும் இந்த நாய்க்கு ஒரு கண் தெரியாது. ஒருகாதும் கிடையாது. அதன் வளைந்த வால் அறுபட்டுள்ளது. பசியால் ஒடுங்கிய அதன் வயிறு முதுகுடன் ஒட்டி விட்டது. ஏதோ ஒரு நோயினால் மெலிந்து மூப்படைந்து கழுத்தில் மாட்டப்பட்ட ஒரு வளையத்தைச் சுமந்த படி இந்த நாய் ஒரு பெட்டை நாய்க்குப் பின்னால் ஓடுமானால் காமம் யாரைத்தான் ஆட்டிவைக்காது என்கிறார் இப்புலவர்.

உணங்கி யொருகால் முடமாகி ஒருகண் ணிழந்து செவியின்றி,
வணங்கு நெடுவால் அறுப்புண்டு வயிறும் பசியால் முதுகொட்டி,
அணங்கு நலிய மூப்பெய்தி அகல்வாயோடு கழுத்தேந்திச்,
சுணங்கன் முடுவல் பின் சென்றால் யாரைக் காமன் துயர் செய்யான்.

(சுணங்கன் - ஆண்நாய், முடுவல் - பெண்நாய்)

Love and Lust

Various scholars have long attempted to explain the subtle yet profound difference between love and lust. This topic has been studied across generations and cultures.

According to a Sangam Tamil poet, "Love is the union of the heart and soul." Based on this perspective, love can be described as a unique and beautiful emotion that distinguishes humanity. Researchers, however, note that there is no conclusive evidence to suggest that other creatures—such as birds or animals—experience love in the same way humans do.

Love is instinctive. Just as no one teaches a weaver bird how to build a nest, the feeling of love arises naturally—it is imprinted in our instincts.

Similarly, lust is not something taught by anyone. It is a natural drive common to all living beings. Lust is what nature has instilled as essential for reproduction and the continuation of species. However, unlike love, lust is a temporary attraction, often centered around physical desire and self-pleasure. It arises purely from the physical differences between male and female.

Those who are governed by lust may act without shame, conscience, or consideration for the feelings of others. It is a fleeting desire, disappearing as quickly as it appears.

A distinguishing feature of lust is the obsessive urge to satisfy one's desires, regardless of personal dignity or the status of the other person. A vivid metaphor is offered by an unknown poet in the Viveka Chinthamani, a collection of reflective poems, who compares a lustful person to a desperate dog.

The poet describes a dog that, no matter where it is struck, runs with one leg raised. This dog is blind and deaf. Its curved tail is cut off, and its stomach, shriveled from hunger, clings to its spine. Diseased, emaciated, and wearing a ring around its neck, this pitiful creature still chases a female dog, driven purely by lust. The poet uses this imagery to underscore the degrading, all - consuming nature of lust.

யாழ்ப்பாணம் நல்லை ஆதீன குருமுதல்வர் சிறீலசிறீ சோமசுந்தர தேசிய ஞானசம்பந்த சுவாமிகளுக்கு கனடாவில் பக்திபூர்வ ஆன்மிக அஞ்சலி

கடந்த மாதம் முதலாம் திகதி இறைபதம் எய்திய யாழ்ப்பாணம் நல்லை ஆதீன குருமுதல்வர் சிறீலசிறீ சோமசுந்தர தேசிய ஞானசம்பந்த சுவாமிகளுக்கு (68 வயது) பக்திபூர்வ அஞ்சலி நிகழ்வு கனடாவின் நல்லூர் கந்தசாமி கோவில் திருமண்டபத்தில் கடந்த மாதம் 4ம் திகதி இடம்பெற்றது. குருமுதல்வரோடு ஆன்மிக ரீதியாகவும், சமூக ரீதியாகவும் தொடர்புள்ளவர்களான திருவாளர்கள் ஞானசெல்வம், கேதா நடராஜா, வைத்தீஸ்வரன் ஆகியோர் இந்நிகழ்வை மிகவும் குறுகிய காலத்தில் ஏற்பாடு செய்திருந்தனர். மதகுருமார் பெருமளவில் பங்குபற்றி பூஜை வழிபாடுகளை நடத்தி நிகழ்வை மேன்மைப்படுத்தினர். சமய சமூகப் பணிகளோடு தொடர்புள்ள பலர் குருமுதல்வரின் இளவயது முதலான சேவைகளை விதந்துரைத்தனர். பெருமளவிலான இளையோர் இந்நிகழ்வில் பங்குபற்றியது குறிப்பிடத்தக்கது. வண.பிதா அமுது ஜோசெப் சந்திரகாந்தன் அடிகளாரின் அஞ்சலி செய்தி நிகழ்வில் வாசிக்கப்பட்டது. பஜனைப் பாடல்கள், பக்தி கீதம் என்பவை இசைக்கப்பட்டு குருமுதல்வருக்கு இறுதி வணக்கம் செலுத்தப்பட்டது. (ஒளிப்படம்: ஐயா4U)





ப. ஸ்ரீஸ்கந்தன்

ஞாபகம் துளிர்க்கிறதே - 45

நான் சேர்த்த சொத்து

மகள் திருமணமாகிச் சென்று, சில வருடங்கள் கழிந்த பின்னர் திடீரென ஒருநாள் என்னிடம் கேட்டாள்:

“அப்பா நீங்கள் ஏன் பெரிய வீடு வாங்கி move பண்ண யோசிக்கேல்லை”

நான் கொஞ்சம் ஆடித்தான் போனேன். இவ்வளவு காலமும் எமது எல்லா இன்ப துன்பங்களிலும் எம்மோடு இருந்தவள். நான் அவள்மீது உயிரா - கவும் அவள் என்மீது உயிராகவும் இருந்ததால் அவள் கேட்டது, கேட்காதது எல்லாம் வாங்கிக் கொடுத்தவன். இப்படி ஒரு குறை அவளுக்கு இருப்பதாக நான் நினைக்கவில்லை. இப்போதும் நினைக்கவில்லை.

மகளின் சிநேகிதிகள் பலர் பெரிய வீடுகளில் இருந்தார்கள். அவர்கள் அல்லது எனது மகள் நெருங்கிப் பழகும் அவர்களது பெற்றோர்கள் இவளிடம் கேட்டிருக்கக்கூடும். மகளும் அந்தக் கேள்வியை சீரியஸாக என்னிடம் கேட்கவில்லை. சும்மா அறிந்து கொள்ள கேட்டது போலவே இருந்தது. நான் வங்கியில் நாற்பது வீதம் வரி செலுத்தும் சம்பளத்தில் வேலை செய்யும் பதவியில் இருந்தும் ஏன் பெரிய வீடு வாங்க - வில்லை என்பது கேள்வியின் உள்ளர்த்தமாகவும் இருந்திருக்கலாம்.

“இன்னமும் அந்த வீட்டிலேயோ இருக்கிறியள்” என்று கேட்டு என்னை மறைமுகமாகக் கிண்டல் செய்தவர்கள் இருக்கிறார்கள். அவற்றை நான் பொருட்படுத்துவதில்லை.

1990ல் நான் அந்தச் சின்ன வீட்டை வாங்கிய - போது வீட்டு அடமான வட்டி பன்னிரண்டு வீதமாக இருந்தது. இரண்டு வேலை, மூன்று வேலை எனச் செய்து 2005ம் ஆண்டு வீட்டு அடமானக் கடன் முழுவதையும் அடைத்தேன்.

அந்த வருடம் என் இதய நாளங்கள் அடைத்து சனிபுறூக் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றேன். என் எண்ணங்களைச் சிதறடித்த காலமாக அது இருந்தது. அப்போது மகளுக்கு 16 வயது. பொறுப்புகள் கண்முன்னே வந்த சதிராடியது. நான் இல்லாவிட்டால் என்ற கேள்வி எழுந்து என்னை ஆட்டிப் படைத்தது. பெரிய வீடு வாங்கும் எண்ணமே வராதபடி என் வாழ்வு மாறிப்போனது.

வங்கியில் எனது ஆரம்ப நாட்கள் அவ்வளவு இலகுவாக இருக்கவில்லை. நான் வங்கியில் சேர்ந்தபோது கனடாவில் சுமார் மூவாயிரம் வரையான தமிழர்களே இருந்தார்கள். வழிகாட்ட எவரும் இருக்கவில்லை. பல்கலாசார நாடு என்பதால் பல நாட்டவர்கள், பல மொழிகள் பேசுபவர்கள் வங்கியில் வேலை செய்தார்கள். அந்நாட்களில் அவர்களை மீறி முன்னேறுவது கடினமாக இருந்தது. இச்சிக்கல்கள் குறித்து முன்னொரு தடவை எழுதியுள்ளேன்.

மகள் பிறந்தபோதுகூட லீவு தர மறுத்த எனது மேற்பார்வையாளர், உனக்கு தகுதி இருக்கிறது - ஆனால் அதைவிட வேறு விசயங்களும் இருக்கிறது என மறைமுகமாக நிறத்துவேசத்தைக் காட்டி பதவி உயர்வு தர மறுத்த மேலதிகாரி போன்ற கல்நெஞ்சக்காரர் தாங்கொணாத் தொல்லைகள் தந்தார்கள். போகவே மனம் இல்லாமல் வேலைக்குப் போய்க்கொண்டிருந்த காலம் இருந்தது.

இதன் தாக்கம் என் மனதில் ஆழமாகப் பதிந்திருந்தது. நான் வங்கியில் முகாமையாளராக பதவியேற்றபோது எனது மேற்பார்வையின் கீழ் வேலை செய்தவர்களை கண்ணியமாக நடத்த வேண்டும், ஒரு வழிகாட்டியாக இருக்க வேண்டும் என தீர்மானம் செய்து கொண்டேன். அது என் சுபாவமாகவும் இருந்தது.

நான் பகுதிநேர காசாளராக ஆரம்பித்து படிப்படியாக அனைத்து வேலைகளையும் செய்து உயர்ந்தவன் என்பதால் வங்கியின் விடயங்கள் எல்லாம் என் விரல் நுனியில் இருந்தன. ஊழியர்களுக்குப் படிப்பிப்பது, என்னென்ன பரீட்சைகள் எடுக்க வேண்டும் என்று உற்சாகப்படுத்துவது, பதவி உயர்வுகள் வழங்குவது என அவர்களை வளர்த்துவிட்டேன். அவர்களில் பலர் இன்று வங்கியில் பெரும் பதவிகளில் இருக்கிறார்கள்.

அவர்கள் என்னை தங்களின் இரண்டாம் தந்தை எனச் சொல்வார்கள். தங்கள் திருமணத்துக்கு அழைப்பார்கள். நான் வங்கியில் இணைந்து நாற்பது வருடங்களும், இளைப்பாறி எட்டு வருடங்களும் ஆகிவிட்டது. இன்றும் பலர் என்னைச் சந்திக்கிறார்கள். கொஞ்சம் ஓவராகத்தான் போகிறது. இனி தொடங்கிய விசயத்துக்கு வருவோம்.

நான் எங்காவது வெளியில் செல்லும்போது “நீங்கள் ஸ்ரீ அண்ணையா? நீங்கள்தான் எங்கள் முதல் பாங்க் எக்கவுண்டை திறந்தனீங்கள்” என்று பலர் நன்றியுடன் சொல்வதை மகள் கேட்டிருக்கிறாள். பாஸ்போட்டை விமான கழிப்பறைக்குள் கிழித்துப் போட்டுவிட்டு அடையாள அட்டைகள் இல்லாத பலருக்கு எக்கவுண்ட் திறந்து உதவிகள் செய்துள்ளேன்.

ஒருநாள் வங்கி ஒன்றின் கிளைக்கு மகளோடு போனபோது என்னைக் கண்ட முகாமையாளர் நீல் என்னைக் கட்டிப்பிடித்து, அப்பாவால்தான் இந்நிலைக்குத் தான் வந்ததாக என் மகளுக்குச் சொன்னார். அதுமட்டுமன்றி ஒவ்வொரு ஊழியர்களிடமும் என்னை அழைத்துச் சென்று நான் யார் என்பதை அவர்களுக்குச் சொன்னார்.

நான் இளைப்பாறும் இறுதிக் காலத்தில் அதே வங்கியில் மகளுக்கு வேலை கிடைத்தது. அவள் என்னைப் போலல்லாது விரைவாக முன்னேறி வந்தாள். அவள் எனது இறுதிப் பெயரை கொண்டிருப்பதால் பலர் அவளோடு தொடர்பு கொண்டு “ஸ்ரீயின் மகளா?” என்று கேட்டு என்னைப் புகழ்ந்து தள்ளியுள்ளனர். அவளும் இவரைத் தெரியுமா, அவரைத் தெரியுமா என்று என்னிடம் கேட்டு களைத்துப் போனாள்.

“அப்பா, பாங்கில் பலருக்கு உங்களைத் தெரிந்திருக்கிறது. நல்ல மதிப்பும் வைத்திருக்கிறார்கள். நிறைய பேரை உயர்த்தி விட்டிருக்கிறீர்கள். எனக்குப் பெருமையாக இருக்கிறது” என்றாள்.

அதுதான் நான் சேர்த்த சொத்து.

உளநலப் பிரச்சனைக்கு ஆதரவுச்சேவை வழங்க றோய் ரட்னவேல் குடும்பம் ஒரு மில்லியன் நன்கொடை

கனடாவில் உளநலப் பிரச்சனைகளை எதிர்த்துப் போராடுபவர்களுக்கு ஆதரவுச் சேவைகளை வழங்கவென ஈழத்தமிழரான திரு. றோய் ரட்னவேல் அவர்களும் அவரது மனைவி சூ நாதனும் ஸ்காபரோ ஹெல்த் நெற்வேர்க் ஃபவுண்டேஷனுக்கு (Scarborough Health Network Foundation - SHN) ஒரு மில்லியன் டாலர்களை நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

றோய் ரட்னவேல் 1969ம் ஆண்டு இலங்கையின் தலைநகரான கொழும்பில் பிறந்தவர். பதினேழு வயதில் இவர் ஓர் அரசியல் கைதியாகி, கொடூரமான மற்றும் அடக்குமுறை சூழ்நிலைகளில் கடுமையான மாதங்களைக் கழித்தவர். சிறையிலிருந்து அதிர்ஷ்டவசமாக விடுவிக்கப்பட்ட பின்னர் பதினெட்டு வயதில் கனடாவுக்குத் தனியாக வந்தவர். இப்போது கனடாவின் மிகப்பெரிய சுயாதீன சொத்து மேலாண்மை நிறுவனத்தில் ஒரு நிர்வாகியாக உள்ளார்.

சிறைவாசத்தில் சித்திரவதைகளை அனுபவித்த இவர் அதிலிருந்து தப்பித்து, தமது சட்டைப்பையில் 50 டாலருடன் கனடாவுக்கு வந்து, ஆரம்பத்தில் தனியார் அலுவலகமொன்றின் தபால் பிரிவில் ஓர் ஊழியராக தமது வாழ்க்கையை ஆரம்பித்தவர். எவருமே நம்ப முடியாத தமது அனுபவத்தை ஒரு நூலாக தமது சிறைக்கைதி இலக்கமான Prisoner #1056 என்ற பெயரில் கனடாவில் வெளியிட்டுள்ளார்.

தமது சொந்த சிறைவாழ்க்கை அனுபவங்கள் மூலம் உளநலம் தொடர்பான பெரும் சவால்களை நன்கு அறிந்திருக்கும் றோய் ரட்னவேல், உளநலப் பிரச்சனைகளை எதிர்த்துப் போராடுபவர்களுக்கு தேவையான ஆதரவை வழங்கும் நோக்கத்துடன், பன்முகத் தன்மை கொண்ட சமூகத்திற்கு அத்தியாவசியமான சிறப்பு சுகாதார சேவைகளை வழங்கி வரும் ஸ்காபரோ ஹெல்த் நெற்வேர்க் ஃபவுண்டேஷனுக்கு தமது மனைவியுடன் இணைந்து ஒரு மில்லியன் டாலர்களை நன்கொடையாக வழங்கியுள்ளார். இந்த நன்கொடை உளநல சவால்களை எதிர்கொள்ளும் தனியாட்கள் மற்றும் குடும்பங்களின் வாழ்க்கையில் கணிசமான மாற்றத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன், ஸ்காபரோ பேர்ச்மவுண்ட் மருத்துவமனையில் சிகிச்சை பெறும் உளநோயாளிகளின் நலத்தை விரிவுபடுத்தவும், உளநல நிலைமைகள் பற்றியும் மற்றும் பிற சிக்கலான சுகாதார தேவைகளைக் கொண்ட பாதிக்கப்படக்கூடியவர்களை ஆதரிப்பதற்கும் நன்கொடை உதவக்கூடியது.

ஸ்காபரோவில் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் இனஅழிப்பு நினைவு வணக்கம்

Tamil Genocide Monument inaugurated in Brampton, Canada

The Tamil Genocide Monument, dedicated to the victims and survivors of the genocide perpetrated by the Sri Lankan state in the final phase of the armed conflict, was inaugurated in Brampton, Canada on May 10.

In the final phase of the armed conflict, the Sri Lankan state encouraged Tamils to gather in 'No Fire Zones' which were intentionally bombed and denied them access to food and medicine. Throughout the armed conflict, Sri Lanka committed unlawful killings, enforced disappearances, torture and sexual violence against Tamils.

The inspiration for the memorial came after the Mullivaikkal memorial at Jaffna University, which was erected in 2019 to honour the Tamil lives lost in the genocide, was bulldozed by Sri Lanka's authorities. This act of destruction led to widespread outrage within the Tamil homeland and globally. Backed by city leaders, two local organisations, the Brampton Tamil Association and Brampton Tamil Seniors Association, joined hands to spearhead the project.

Thousands gathered at Chinguacousy Park in the city of Brampton, home to a significant Tamil population, for the unveiling of the monument.

The ceremony began with the lighting of a lamp to remember the victims of the Tamil genocide. The lamp was lit by various Tamil activists and politicians, including Mayor of Brampton Patrick Brown and MPP for Scarborough-Rouge Park Vijay Thanigasalam.

The design of the monument includes a book shaped structure symbolising educating the history of the Tamil genocide with a map of Tamil Eelam that signifies the ancestral Tamil homeland.

The nine panels, which symbolise the nine districts of the North-East, details the acts of genocide perpetrated by Sri Lanka since 1948.

The Mayor of Brampton, Patrick Brown, told the crowd about the obstacles Brampton city faced in constructing the monument. In August 2024, a ceremony was held to lay the foundation stone for the monument, however, this was disrupted by a group of Sinhala protesters.

The protesters shouted 'shame on you' and held placards that read claimed Brampton Mayor Patrick Brown is 'destroying peaceful Sri Lanka'.

“We do not forget the extent of the Tamil Genocide,” Brown said at the inauguration. "The genocide deniers - you’re not welcome in Brampton, you’re not welcome in Canada, go back to Colombo," Brown said.

“Hundreds of thousands of civilians were murdered by the Sri Lankan state. The state engaged in a campaign of.... misinformation. They tried to disparage and attack Tamils who were speaking up for the truth, for justice. Not only

(Cntd. on page 30)

வானிலை
கணிக்கக்கூடியது
ஆனால்
உங்கள் எதிர்காலம்
அப்படியல்ல
எங்கள் நோக்கம்
உங்கள்
எதிர்காலத்தை
பாதுகாப்பது
AJITH SABARATNAM
INSURANCE & INVESTMENTS INC.
LIFE INSURANCE
CRITICAL ILLNESS
DISABILITY INSURANCE
NON-MEDICAL INSURANCE
SUPER VISAS
RRSP & RESP
WE TRULY CARE FOR YOU & YOUR LOVED ONES!
647 401 5800
ajithinsurance.ca
ajithsaba@gmail.com
10 Thornmount Dr, Scarborough, Ontario M1B 3J4

Medcentre Health

Synchronizing Health Sectors

Medcentre Urgent Care

(Walk-In Clinic & Urgent Care Centre)

Our "Markham McNicoll Urgent Care Centre (MMUCC)" (unit 11) got restructured and moved to Unit-7, in the same building (2901 Markham Road, Scarborough, ON M1X 0B6) as "Medcentre Urgent Care".

* It has better organization, better customer care, and a bigger clinic with more examination rooms.
* The doctors & professional staff who worked in the former MMUCC are working at the new clinic.
* Daily **2 or 3 doctors** working on site.
* **Dr. Kenneth Bonnah, Dr. Taran Boparai, Dr. David Haile, Dr. Hunaina Mirza & Dr. Annie Hadi are working at our centre.**
* **Open all 365 days of the year, including Statutory holidays.**
* We cater patients who don't have a family doctor & also provide a doctor's appointment as quickly as possible in an urgent situation.
* "Urgent Care Centre" for non-life-threatening emergencies & a Walk-In clinic for common medical conditions.
* **Same-day appointments can be booked** online at our website from 12 am.
* Walk-in patients accepted as well.

Medcentre Women's Health Care

Our former "Markham McNicoll Women's Health Care Clinic (MMWHC)" is now functioning as "Medcentre Women's Health Care" at Unit-7 in the same place as before.

Dr. Jasleen Grewal MD, CCFP a certified Family Medicine Specialist, and has a Special interest in Women's Health Care is working with us since the inception of this clinic in 2022.

*** Services:**

- Preventive Women's Health – **Pap Test**
- Testing & treatment of Sexually Transmitted Infections (STI)
- Vaginal discharge
- Genital Wart Treatment
- All types of Contraception (Birth Control) Counselling
- IUD / IUS Counselling, Insertion & Removal
- Nexplanon Implant Counselling, Insertion & Removal
- Various **women-related medical concerns**

Centralized new Phone Number: 416-297-7777

Medcentrehealth.com or medcentreurgentcare.com

2901 Markham Road (Markham & NcNicoll intersection), Toronto, ON M1X 0B6

EENC.ca Employment and Education Network Canada Inc.

Scarborough READERS' CHOICE 2021 GOLD WINNER

TORONTO STAR READERS' CHOICE 2022 DIAMOND WINNER

TORONTO STAR READERS' CHOICE 2023 DIAMOND WINNER

TORONTO STAR READERS' CHOICE 2024 DIAMOND WINNER

FREE WORKSHOPS

(We are not a school)

Pre-Study MS-Office Workshops

If you are planning to attend a class at a school remotely, this workshop may help you. These in-person classes are FREE and open to the public.

Post-Study Boot Camps

While remote learning offers convenience, we have noticed that many graduates are struggling to succeed interviews. As a solution, we have created a half-day, in-person workshops for graduates to review subjects in preparation for the jobs they are applying for. These workshops are free for EENC clients

7 STEP - JOB Search Workshops

Step 1: Resume Workshop **Step 2:** One-on-One Resume building Session **Step 3:** Finalizing Resume **Step 4:** Interview Techniques workshop **Step 5:** One-on-One Interview Preparation **Step 6:** Mock Interview **Step 7:** Referrals to Employers. *(Please note: Jobs are not guaranteed by EENC or our staff , these work shops are only availabe to EENC clients).*

JOB FAIR

SCAN ME>>

- Dashi Karen 647-339-3362 *(English, Tamil)*
- Rupa Mothey 647-501-3362 *(English, Hindi, Nepali, Arabic)*
- Luckshi Mahesan 647-720-2115 *(English, Tamil)*
- Neha Bangar 416-268-1987 *(English, Hindi, Punjabi)*
- Usha Sukumar 437-288-6070 *(English, Tamil)*
- Maria Bernardo 647-448-0818 *(English, Tagalog, Visayan)*
- Sudip Mukherjee 647-501-3362 *(English, Hindi, Bengali, Nepali)*
- Jasli P. Thankachan 647-965-3362 *(English, Malayalam, Arabic)*

Employers, if you are looking to hire the right staff, please contact careers@eenc.ca.

Our service is free.

Chapel Ridge

FUNERAL HOME
& CREMATION CENTRE

Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை
உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

At Need Funeral Arrangements

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

• *Vistation* • *Funeral & Memorial Service*
• *Reception* • *Burial* • *Cremation*

மார்க்கம், மற்றும் மிசிசாகா
நகரங்களில் எமது சேவை



Christeen Seevaratnam
416-258-6759

Vilosanan Sivatharman
Funeral Director
416-993-0826



இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

Pre-Arranging: A Wise Choice...

FINANCIAL BENEFITS
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

EMOTIONAL BENEFITS
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1
www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

A caring part of our community

Srisakthi Jewellery
5551 Markham Road, Suite 151
Toronto, ON. M1X 0A6
(Markham & Steels - Red Building)
Srisakthijewellery1@gmail.com
B: 416 755 0559 C: 416 625 6677

TVS CARGO
AIR & SEA CARGO, WORLDWIDE COURIER
416-291-3232
info@tvscargo.com
www.tvscargo.com
3351 Markham Rd, Unit 113
Scarborough, ON M1X 0A6

A1 Studio At GTA Square
Rudy Ruthran
GTA Square, 5215 Finch Ave East, #103, Toronto, M1S 0C2.
rudyruthran@gmail.com
Tel: 416-587-5583

NATHAN SRITHARAN
Barrister & Solicitor, Notary Public
305 Milner Ave.
Suite #309
Toronto, Ontario
M1B 3V4
(Milner / Markham)
Tel: 416-499-2760
Fax: 416-499-6534
E-mail: sritharan@nathanlaw.ca

JRB GROUP CORPORATION
Loans, Mortgages, Insurance, Visa,
Real Estate, Master Card, Credit Counselling
Best rate Mortgage Arranged
Almost All Services Available
Business Loans 25K to 500,00
புதிதாக ஆரம்பிக்கப்பட்ட அல்லது ஆரம்பிக்கப்படவுள்ள
சகல வர்த்தகர்களுக்குமான சிறப்பான சேவை!
FINANCE

R. R. Rajkumar B. Com (Hons), MBA
647–289–6164 / 416–655–5577

வாகன விபத்தில் காயமடைந்து விட்டீர்களா?
அனுபவசாலிகளின் ஆலோசனை
பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்.
MATRIX LEGAL SERVICES
PROFESSIONAL CORPORATION
Even if the accident is your fault:
Employed • Unemployed
Passenger • Pedestrian
Public transit
cyclist
WE ARE HERE TO
HELP YOU
இலவச ஆலோசனைகளுக்கு:
தீபன்
24 Hours Direct Line
(416) 831-4444
(416) 505-9804
2190 Warden Ave., Suite 202, Toronto, ON M1T 1V6

KEV TAX

KNOWLEDGE & EXPERIENCE IS VITAL

www.kevtax.com

- CORPORATE INCOME TAX
- BOOKKEEPING & ACCOUNTING SERVICES
- PERSONAL INCOME TAXES
- QUALITY SERVICE WITH REASONABLE FEES
- FREE YEAR-ROUND CUSTOMER SERVICE
- CORPORATE AND SOLE PROPRIETORSHIP BUSINESS REGISTRATION

SENIORS / WELFARE RECIPIENTS
ALL RETURNS INCLUDE EFILE SERVICE

FREE
EFILE
SERVICE

Ganthiy Selvarajah
(B.A. Sri Lanka)

TEL: 416.841.1866
FAX: 1.888.841.8829
kevtax.ganthiy@gmail.com



Middlefield & Finch
$499,000

CALL YOUR PROFESSIONAL SERVICE

Rave
P. Raveenthiran
Sales Representative

Dir: 416-567-2462
Email: realtor.rave@gmail.com

HOMELIFE
HIGHER STANDARDS
Homelife/Future Realty Inc.
Independently Owned & Operated

HomeLife/Future
Realty Inc., Brokerage
205-7 Eastvale Dr, Markham ON. L3S 4N8
Bus: 905.201.9977

Financial Services
42 YEARS IN BUSINESS
KASI
THIRU
M. KASIPPILLAI & SONS INC.
3228 Eglinton Ave. E., Suite #3, Scarborough, Ont. M1J 2H6
Tel.: (416) 267-8221 Fax: (416) 267-0620

ABBIRAMI
CATERING AND TAKE OUT SERVICE
அபிராமியின்
வாழையிலை
விருந்து
Tel: (416) 266-5372
2619 Eglinton Ave. East,
Scarborough, Ont M1K 2S2
(Between Brimly & Midland)

பந்தல்
சேவை
Special Event
Tents Service
416-606-5284
அ
ஐ

Babu Florist Ltd.
6055 Steeles Ave, Unit C114, Scarborough, Ontario. M1X 0A7
Temple, Wedding, Funeral & Others
Indian Malai & Jasmine Flowers Available
Call : M.Babu
416-754-8282
www.babuflorist.com
Email : info@babuflorist.com

BAYVIEW HOMES
DESIGN LTD.
Dream Becomes Reality
Building Permits
Minor Veriance
Lot Severance
Legal Basement
Project Management
Kathir
416 856 6900
Subramaniam
Kathirgamanathan P.Eng.
BCIN 45205
email: kathirhomes@gmail.coml

சிவஸ்ரீ
சிவ. ஜனார்த்தன
குருக்கள்
647-449-6542
aarthananyathu@gmail.com
aarthanan@hotmail.com

KANAGAAMBIKAI
GOLD HOUSE
We Sell
*Singapore Jewellery
*Finest Quality 22K Gold
*Diamonds/ Birth Stones/ Jewellery/ Watches
We Provide
*Jewellery Repairs
Gold Items
3160 EGLINTON AVE,E.,UNIT #3,
SCARBOROUGH,ON M1J 2H4
Tel:416-269-7197

8 Shadlock St Unit #6,
Markham, ON L3S 3K9
Tel : 416-321-7552
INDRAN SWEET
& Ice Cream

கவல்கணன் - ஆஸ்திலேலியா

ஆஸ்திரேலிய பொதுத்தேர்தலும் ஈழத்தமிழ் பெண்களும்

ஆஸ்திரேலியப் பிரதமர்
அந்தோனி அல்பனீஸ்

அஷ்வினி
அம்பிகைபாகர்

மிஷேல்
ஆனந்தராஜா

நடந்து முடிந்த ஆஸ்திரேலிய பொதுத்தேர்தல் பல புதிய சாதனைகளுக்கு வழி வகுத்துள்ளது. வாக்களிக்கும் உரிமையுள்ள அனைவரும் வாக்களிக்க வேண்டியது ஆஸ்திரேலியாவில் கட்டாயமாக்கப்பட்டுள்ளமையால் கனடா, அமெரிக்கா போல அல்லாமல் தேர்தல் முடிவுகள் அனைத்து மக்களின் தீர்ப்பு என்று வாதிப்பவர்கள் இருக்கிறார்கள்.

அது தவிர, ஒவ்வொரு வேட்பாளரும், தான் 50% வாக்குகளைப் பெற்று அறுதியாக வெற்றி பெறவில்லை என்றால் தனது வாக்குகள் யாருக்குப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பதை தேர்தலுக்கு முன்னரே அறிவித்துவிட வேண்டும். இதனால் தேர்தல் முடிந்து (இந்தக் கட்டுரை எழுதப்படும் வேளை) இரண்டு வாரங்களுக்குமேல் ஆகியிருந்தாலும் இன்னமும் இரண்டு தொகுதிகளின் முடிவு வெளியாகவில்லை. இன்னொரு தொகுதியில் ஒரு சுயேட்சை வேட்பாளர், வெறும் 39 வாக்குகளுடன் முன்னிலையில் நிற்கிறார்.

இருந்தாலும், இதுவரை அறிவிக்கப்பட்ட முடிவுகளின்படி, Australian Labor Party (சுருக்கமாக, Labor கட்சி - அதனை தொழிலாளர் கட்சி என்று மொழிபெயர்ப்பதை எதிர்ப்பவன் நான்) 93 இடங்களில் வெற்றி பெற்று வரலாறு படைத்துள்ளது.

பிரதமர் Anthony Albanese தலைமையிலான Labor கட்சி, 93 தொகுதிகளில் வெற்றிபெற்று மீண்டும் ஆட்சியமைக்க இருக்கிறது. 150 உறுப்பினர்களைக் கொண்ட House of Representatives என்ற சபையில் பெரும்பான்மைக்குத் தேவையானதை விட 57 இடங்கள் அதிகமாகும். இந்த எண்ணிக்கை 94 ஆக உயர வாய்ப்பிருக்கிறது.

Liberal-National Coalition கூட்டணி குறிப்பிடத்தக்க இழப்புகளைச் சந்தித்தது, 43 இடங்களை மட்டுமே கூட்டணி வென்றுள்ளது. குறிப்பாக, எதிர்க்கட்சித் தலைவர் Peter Dutton தனது Dickson தொகுதியை Labor கட்சியின் Ali Franceசிடம் இழந்தது ஒரு வரலாற்றுத் தோல்வியாகும். Liberal கட்சியின் வரலாற்றில் இப்படியான ஒரு தோல்வியை இதுவரை அந்தக் கட்சி சந்தித்ததில்லை.

இந்த நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாக, அரசியல் ஆய்வாளர்கள் மற்றும் நிபுணர்களின் ஆய்வுகள் மாறுபட்டதாகக் காணப்பட்டன. தேர்தலுக்கு முதல் நாள் கூட, ஆய்வாளர்கள் பின்வரும் மூன்று முடிவுகளில் ஒன்றை நாம் எதிர்பார்க்கலாம் என்றுதான் கூறினார்கள். Labor கட்சி ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ளலாம், அது ஒரு சிறுபான்மை அரசாக இருக்கலாம், Coalition கூட்டணி வெற்றி பெறலாம். இந்த மூன்று முடிவுகளைத் தவிர வேறு ஏதாவது முடிவுகள் ஆஸ்திரேலிய நாடாளுமன்றத் தேர்தலில் கிடைக்காது என்றாலும் ஆய்வாளர்கள் என்று தம்பட்டம் அடித்துக் கொள்பவர்கள் இந்த மூன்றில் ஒன்றுதான் நடக்கலாம் என்று கூறியதிலிருந்து, தேர்தல் முடிவுகள் எப்படி அமையும் என்பது யாருக்கும் தெரியாத விடயம் என்பது தெளிவாகத் தெரிந்தது.

இருந்தாலும் YouGov நடத்திய தேர்தலுக்கு முன்னதான இறுதி கருத்துக்கணிப்பில் Labor கட்சி பெரும்பான்மையைப் பெறத் தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டன. சுமார் 82 இடங்களைப் பெறும் என்று அதன் கணிப்புகள் மதிப்பிட்டன. இருப்பினும் இந்த முடிவுகள், ஒருவேளை அதிக வாக்கு வித்தியாசம் இல்லாமல் வரலாம் என்றும் அது பரிந்துரைத்தது.

வாழ்க்கைச் செலவு அழுத்தங்கள், காலநிலை மாற்றக் கொள்கைகள் மற்றும் அணுசக்தி மீதான கூட்டணியின் நிலைப்பாடு உள்ளிட்ட வாக்காளர் உணர்வைப் பாதிக்கும் பல முக்கிய பிரச்சனைகள் என்று நிபுணர்கள் அடையாளம் கண்டனர். அணு சக்தியை விரிவுபடுத்துவதற்கான Liberal கட்சியின் திட்டம் குறிப்பிடத்தக்க பொதுமக்களின் சந்தேகத்தை எதிர்கொண்டது.

உலகளாவிய அளவில் வலதுசாரி கொள்கைகளுக்கு எதிரான உணர்வுகள் பரவ ஆரம்பித்ததன் காரணமாக, நகர்ப்புற வாக்காளர்களில், குறிப்பாக இளைய வாக்காளர்கள் மற்றும் பெண்களிடையே, Coalition கூட்டணியின் செல்வாக்கு குறைந்துள்ளதாக ஆய்வாளர்கள் கணித்திருந்தார்கள். மாறாக, பிராந்திய பகுதிகளில் Coalition கூட்டணி வலுவான ஆதரவைத் தக்க வைத்துக் கொள்ளும் என்று அவர்கள் எதிர்பார்த்தனர்.

அனைவரது எதிர்பார்ப்புகளையும் நடந்து முடிந்த தேர்தல் முடிவுகள் தகர்த்துள்ளன.

இந்த முடிவு, Labor கட்சி பெரும்பான்மையின் கணிப்புகளை உறுதிப்படுத்தியது மட்டுமல்லாமல், சமீபத்திய அவுஸ்திரேலிய அரசியல் வரலாற்றில் மிக முக்கியமான வெற்றிகளில் ஒன்றாகவும் அமைந்துள்ளது.

இந்தத் தேர்தலில், Greens கட்சி என்ற பிரதிநிதிகள் சபையில் குறிப்பிடத்தக்க பின்னடைவைச் சந்தித்துள்ளது. Queensland மாநிலத்தில் அவர்கள் முன்பு வைத்திருந்த மூன்று தொகுதிகளில், ஒரு தொகுதியை மட்டுமே வென்றுள்ளது. அதே மாநிலத்தில், Griffith மற்றும் Brisbane ஆகிய தொகுதிகளையும் Labor கட்சியிடம் இழந்தனர். கட்சித் தலைவர் Adam Bandt போட்டியிட்ட Melbourne தொகுதியையும் Labor கட்சியிடம் இழந்துள்ளது. 2022 தேர்தலில் அவர்கள் பெற்ற நான்கு இடங்களிலிருந்து கணிசமான சரிவை இது குறிக்கிறது.

பலஸ்தீனர்களுக்கு ஆதரவாக இவர்கள் கொடுத்த குரல் இதற்கு ஒரு காரணம் என்று சில ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். இருப்பினும், செனட் சபையில் Greens கட்சி வலுவான இருப்பைத் தக்க வைத்துக் கொள்ளும் என்று

→

(27ம் பக்கத்திலிருந்து)

ஆஸ்திரேலிய பொதுத்தேர்தலும்...

எதிர்பார்க்கப்படுகிறது. அவர்கள் 11 இடங்களைக் கைப்பற்றுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது,

இதனால், சட்டங்களை இயற்றுவதற்கு Labor கட்சிக்கு Greens கட்சியின் ஆதரவு இருந்தால் போதும். வேறு எதிர்க்கட்சிகளையோ, சுயேட்சை உறுப்பினர்களையோ நம்பியிருக்க வேண்டியதில்லை.

தேர்தல் முடிவுகள் Liberal கட்சிக்குள் ஒரு சுயபரிசோதனை - யைத் தூண்டியுள்ளது. நகர்ப்புற வாக்காளர்களைப் பெருமளவு நம்பியிருக்கும் அந்தக் கட்சி, அதன் கொள்கை நிலைப்பாடு - களை மறுமதிப்பீடு செய்ய வேண்டியது அவசியம் என்று கட்சியின் மூத்த உறுப்பினர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர். 1946ம் ஆண்டில் The Nationals என்ற கட்சியுடன் (அப்போது அதன் பெயர் Country Party) கூட்டணி அமைத்து, Labor கட்சியுடன் போட்டியிட்டு வந்த Liberal கட்சி, மே 20ம் திகதி அந்த உறவை முறித்துக் கொண்டுள்ளது. Liberal கட்சி முதல் தடவையாக ஒரு பெண்ணை கட்சித் தலைமைப் பொறுப்பேற்க வைத்துள்ளது. அதற்கும் கட்சிகளுக்கிடையிலான உறவு முறிவதற்கும் தொடர்பு இருக்கிறதா தெரியவில்லை. ஆனால், நாடாளுமன்றத்தில் இணைந்து செயல்படப்போவதாக இரு கட்சிகளும் அறிவித்துள்ளன..

இதேவேளை வாக்குச் சாவடிகளில் அச்சுறுத்தல் மற்றும் அடாவடித்தனமான நடத்தை குறித்த புகார்கள் இந்த தேர்தலில் அதிகரித்திருந்ததாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது. அத்துடன், ஆணையம் சில வேட்பாளர்களை எச்சரித்தும் உள்ளது.

தென்மேற்கு சிட்னியில் Labor கட்சி தன்னார்வலர் வாக்களிக்க வந்த ஒருவரிடம், “நீங்கள் எங்கிருந்து வந்தீர்களோ அங்கே திரும்பிச் செல்லுங்கள்” என்று கூறியுள்ளார். அதேபோல, Melbourneல் உள்ள வாக்குச் சாவடிகளில் Liberal கட்சி தன்னார்வலர்கள், Neo-Nazi என்று தம்மை அடையாளப் - படுத்திக் கொண்டவர்கள் என்பதால் அவர்களைக் காவல்துறை விசாரிக்கும் சம்பவங்களும் நடந்துள்ளன.

ஒரு Labor கட்சி நாடாளுமன்ற உறுப்பினரின் தந்தை, ஓரினச்சேர்க்கைக்கு விரோதமான கருத்துகளைக் கூறியதை அடுத்து, பிரதமர் Anthony Albanese அவரைக் கண்டிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. மிரட்டல் நடத்தைக்காக, Liberal கட்சி தன்னார்வலர்கள் பிரிவினைவாத கிறிஸ்தவப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்ற முறைப்பாடும் பதிவாகியுள்ளது.

இதையெல்லாம் மிஞ்சியது போல, Barton என்ற தொகுதி - யில், தேர்தல் இரவில் காணாமல்போன சுமார் 2,000 வாக்குச் சீட்டுகள் தேர்தல் ஆணையத்தின் தற்காலிக ஊழியர் ஒருவரின் வீட்டில் கண்டெடுக்கப்பட்டதை அடுத்து ஆஸ்திரேலிய தேர்தலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தேர்தல் நடந்த, மே 3 அன்று Hurstville என்ற இடத்திலிருந்த வாக்குச் சாவடியில் இருந்து ஒரு பணியாளர் 1,866 வாக்கு - களை ஒரு பாதுகாப்பான கொள்கலனில் சேகரித்ததாகவும், ஆனால் அதை வாக்குகள் எண்ணப்படும் இடத்திற்கு எடுத்துச் செல்லவில்லை என்று தேர்தல் ஆணையம் அறிவித்தது.

வாக்குகள் ஏற்கனவே எண்ணப்பட்டதாலும், வாக்கு வித்தியாசம் முப்பதாயிரத்திற்கும் அதிகமாக இருந்ததாலும், இந்த சம்பவம் NSW தொகுதியான Barton தொகுதியின் முடிவைப் பாதிக்கவில்லை. வெற்றி பெற்றவர் தமிழ்ப் பின்னணி கொண்ட அஸ்வினி அம்பிகைபாகர்.

இந்தத் தேர்தலில் அதிகப்படியான தமிழர்கள் போட்டியிட்டார் - கள். Greenway தொகுதியில் Greens கட்சி சார்பாகப் போட்டியிட்ட பழனியப்பன் சுப்ரமணியம், மற்றும் Parramatta தொகுதியில் சுயேட்சையாகப் போட்டியிட்ட மாலினி இருவரும் வெற்றி பெறவில்லை. Victoria மாநிலத்தில் Calwell தொகுதியில் சுயேட்சையாகப் போட்டியிட்ட ரவி ரகுபதி, Gellibrand தொகுதியில் Greens கட்சி சார்பாகப் போட்டியிட்ட பொன்ராஜ் கிருஸ்ணபாண்டி இருவரும் வெற்றி பெறவில்லை. Wills தொகுதியில் Greens கட்சி சார்பாகப் போட்டியிட்ட சமந்தா இரட்ணம் சிறு வாக்கு வித்தியாசத்தில் இந்தத் தேர்தலில் வெற்றி பெறும் வாய்ப்பை இழந்துள்ளார்.

New South Wales (NSW) மாநிலத்தின் Barton தொகுதியில் Labor கட்சி சார்பாகப் போட்டியிட்ட அஸ்வினி அம்பிகைபாகர் மட்டும் வெற்றி பெற்றுள்ளார். இவர், கவிதை, கவிதை நாடகம், சிறுகதை, கட்டுரை, விமர்சனம், ஆய்வு முதலான துறைகளில் அறியப்பட்டவரான கவிஞர் அம்பி என்று பிரபலமாக அறியப் - பட்ட இ. அம்பிகைபாகர் (17 பெப்ரவரி 1929 - 27 ஏப்ரல் 2024) அவர்களின் மகள்வழி பேர்த்தியாவார். ஈழத்தின் குறிப்பிடத்தக்க மூத்த எழுத்தாளர்களில் ஒருவரான கவிஞர் அம்பி, 1950ம் ஆண்டு முதல் எழுதி வந்தார். இவர் புலம்பெயர்ந்து சிட்னியில் வசித்து வந்தார். சிறுவர் இலக்கியத்திற்கு குறிப்பாக புலம்பெயர் நாடுகளில் தமிழ்ச் சிறார்களுக்காகக் கவிதைகளை எழுதி வந்தவர். தமிழ் பேசும் நல்லுலகில் நன்கு அறியப்பட்டவர்.

ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்திற்குத் தெரிவாகியுள்ள இரண் - டாவது தமிழர் அஸ்வினி அம்பிகைபாகர். அந்தப் பெருமையை முதலில் தட்டிச் சென்ற மிசேல் ஆனந்தராஜா என்ற மருத்துவர் கடந்த தேர்தலில் போட்டியிட்ட தொகுதி, இந்த தேர்தலில் தேர்தல் ஆணையத்தால் நீக்கப்பட்டதைத் தொடர்ந்து, மிசேல் ஆனந்தராஜா போட்டியிடுவதற்குத் தொகுதி ஒன்று இருக்க - வில்லை. எனவே அவரை செனட் சபை வேட்பாளராக Labor கட்சி நிறுத்தியது. அதில் அவர் வெற்றி பெற்று மீண்டும் சாதனை புரிந்துள்ளார்.

ரொறன்ரோவின் தொலைபேசி சேவைக்கு இன்னொரு குறியீடு

ரொறன்ரோ தொலைபேசி பாவனையாளர்களுக்கு இன்னொரு குறியீட்டு இலக்கமாக கடந்த மாதம் 942 பாவனைக்கு வந்துள்ளது. ஏற்கனவே 416, 647, 437 ஆகிய மூன்று குறியீட்டு இலக்கங்கள் பாவனையில் உள்ளன. செல்லிடத் தொலைபேசி பாவனை மிக அதிகரித்து வருவதால் ஏற்கனவே பாவனையில் இருக்கும் மூன்று குறியீட்டு இலக்கங்களும் பூர்த்தியானதால் புதிய இலக்கமாக 942 இணைக்கப் - பட்டுள்ளது.

தமிழரால் மெருகேறும் அன்சாக் தினம்!

அன்சாக் தினம் ஆஸ்திரேலியாவிலும் நியூசிலாந்திலும் ஆண்டு தோறும் ஏப்ரல் 25ம் நாள் நினைவுகூரப்படுகிறது. அன்சாக் (ANZAC) என்பது Australian and New Zealand Army Corps என்பதன் சுருக்கமாகும். முதலாம் உலகப் போரின் போது பிரித்தானியாவின் கூட்டுப் படைகளின் போர்க்கப்பல்கள் கருங்கடலுக்கு இலகுவாகச் செல்வதற்கு ஏதுவாக வழி அமைப்பதற்காக 1915ம் ஆண்டில் துருக்கியின் கலிப்பொலி (Gallipoli) என்ற இடத்திற்கு ஆஸ்திரேலிய, நியூசிலாந்துத் துருப்பினர் அனுப்பப்பட்டனர். துருக்கியின் தலைநகரான இஸ்தான்புல்லைக் கைப்பற்றுவதே அவர்களின் முக்கிய நோக்கமாக இருந்தது. துருக்கிய இராணுவத்தினரின் பலத்த எதிர்ப்பையும் மீறி அவர்கள் ஏப்ரல் 25 அன்று கலிபொலியை சென்றடைந்தனர். ஆனாலும் இச்சண்டை எட்டு மாதங்கள் வரையில் நீடித்தது.

1915 இன் இறுதியில் இருபக்கங்களிலும் ஏற்பட்ட பலத்த சேதங்களின் பின்னர் பிரித்தானியக் கூட்டுப் படைகள் பின்வாங்கின. மொத்தம் 8,709 ஆஸ்திரேலிய, 2,721 நியூசிலாந்துப் படையினர் இச்சண்டையின்போது கொல்லப்பட்டனர். அவர்களில் நுளம்பினால் தொற்றும் வியாதிகளாலும் வயிற்றோட்டத்தினாலும் இறந்தவர்கள் எண்ணிக்கை, குண்டடிபட்டு இறந்தவர்கள் எண்ணிக்கையை விட பன்மடங்கு அதிகம் என்பது இப்பொழுது ஒரு பக்கக்குறிப்பு மட்டுமே.

1916ம் ஆண்டில், ஏப்ரல் 25 நாள் அன்சாக் நாள் என உத்தியோகபூர்வமாகப் பெயரிடப்பட்டு ஆஸ்திரேலிய, நியூசிலாந்து இராணுவத்தினர் முதலாம் உலகப் போரின்போது பிரித்தானியப் பேரரசின் துருக்கி மீதான போர் நடவடிக்கையில், கலிப்பொலி என்ற இடத்தில் தரையிறங்கியதை நினைவுகூரும் முகமாகவும், அப்போரின்போது பங்குபற்றிய, மற்றும் இறந்த இராணுவத்தினரை நினைவுகூரவும் இந்நாள் கொண்டாடப்பட்டு வருகிறது. 2001ம் ஆண்டுவரை இந்த நினைவுகூரல் இராணுவ கட்டமைப்புகளாலும் உலகப் போர்களில் அல்லது அதன்பின்னர் நடந்த போர்களில் கலந்து கொண்ட ஆஸ்திரேலிய மற்றும் நியூசிலாந்து போர் வீரர்களது குடும்பத்தினரும் நண்பர்களும் கலந்து கொள்ளும் நிகழ்வாகவே இருந்தது. அமெரிக்காவில், இரட்டைக் கோபுரம் மீது 2001ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11ம் திகதி நடந்த தாக்குதலைத் தொடர்ந்து உலகளாவிய அளவில் உருவான ‘நாட்டுப்பற்று’ ஆஸ்திரேலியாவையும் விட்டு வைக்கவில்லை.

அதற்கு முன்னரெப்போதும் காணாத அளவு மக்கள் 2002ம் ஆண்டு ஏப்ரல் மாதம் அன்சாக் தின நிகழ்வுகளில் கலந்து கொண்டனர். அதற்கடுத்த ஐந்து வருடங்களில் அன்சாக் நினைவுகூரல்கள் நடக்க ஆரம்பித்த நூற்றாண்டு நிறைவு என்பதால் இந்த நாளும், நினைவுகூரல் நிகழ்வுகளும் பிரபலமாகத் தொடங்கின.

‘தனி வெள்ளையர்’ என்ற குடிவரவு சட்டம் நீக்கப்பட்ட நாட்களில் இருந்து, தமிழர்கள் ஆஸ்திரேலியாவுக்குக் குடிவர ஆரம்பித்து விட்டார்கள் என்றாலும் 1983 ஜூலை மாதத்திற்குப் பின்னர்தான் அதிகளவு தமிழர்கள் இங்கு குடிவர ஆரம்பித்தனர். தற்பொழுது ஒரு இலட்சம் பேர் வீட்டில் தமிழில் கதைப்பதாக, ஆஸ்திரேலிய மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் சொல்லியிருக்கிறார்கள். அவர்களில் கணிசமானவர்கள் ஆஸ்திரேலிய அரசாங்கம் வகுக்கும் கொள்கைகளில் மாற்றங்களை அறிமுகப்படுத்தும் செல்வாக்குள்ளவர்களாகவும் மாறியுள்ளார்கள். சிட்னி நகர் அமைந்துள்ள நியூ சவுத் வேல்ஸ் என்ற மாநிலத்தில் இயங்கும் தமிழ் அமைப்புகளின் கூட்டமைப்பு, 2016ம் ஆண்டு முதல் அன்சாக் தின நினைவுகூரல் நிகழ்வுகளை ஒழுங்கமைத்து வருகிறது. ஆரம்பத்தில் சிறிய அளவில் இந்த நிகழ்வு நிகழ்ந்து வந்திருந்தாலும், கடந்த ஏப்ரல் மாதம் அதன் பதினோராவது நிகழ்வு நடத்தப்பட்டபோது பல ஆஸ்திரேலிய நாடாளுமன்ற அமைச்சர்கள், ஆளும்கட்சி உறுப்பினர்கள், மாநில நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி உறுப்பினர்கள் என்று தமிழர்களும் தமிழர் அல்லாதவரும் கூட்டம் நடந்த மைதானத்தை நிறைத்திருந்தனர்.

அன்சாக் தின நினைவுகூரல் நிகழ்வுகள் எப்படி நடத்தப்பட வேண்டும் என்பது அன்சாக் அமைப்பினால் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளது என்பதால் மற்றைய அன்சாக் தின நினைவுகூரல் நிகழ்வுகளைப் போலவே சீராகவும், சிறப்பாகவும், எந்தவித தொய்வும் இல்லாமல் நடந்தேறியது. தமிழர்களுக்கும் அன்சாக் போராளிகளுக்குமிடையிலான தொடர்பு பற்றி நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கியவர் பேசினார். இலங்கையிலிருந்து முதலாம் உலகப் போரில் பிரித்தானியர்களுக்காகப் போரிட்டவர், மலேசியத் தமிழர்கள் பிரித்தானியப் பேரசிற்காகப் பரிசளித்த, ‘யாழ்ப்பாணம்’ என்று பெயரிடப்பட்ட விமானம், போரில் பங்கெடுத்த சிறுவர்கள் எப்படிப் பார்க்கப்பட்டார்கள், போரில் பங்கெடுத்த பூர்வீககுடி பின்னணி கொண்ட போராளிகள் போர் முடிந்து திரும்பியபோது எப்படி பாரபட்சத்துடன் நடத்தப்பட்டார்கள் என்று பல தொடர்பு -

தமிழரால் மெருகேறும் அன்சாக்...

(முன் பக்கத் தொடர்ச்சி)

களைக் கடந்த வருடங்களில் பகிர்ந்ததாகக் கூறியவர், இந்த வருடம் அன்சாக் பிஸ்கட் (Anzac biscuit) என்ற தின்பண்டத்தில் பயன்படுத்தப்படும் தேங்காய்ப்பூ தமிழரின் வாழ்வுடன் பின்னிப்பிணைந்தது என்பதை எடுத்துக் கூறினார். இவை அனைத்தையும் விட, மறைந்த மாவீரர்களுக்கு நடுகல் அமைத்து வணங்கிய பெருமை சங்ககால தமிழர்களுக்கு மட்டுமன்றி தற்போது வாழும் தமிழர்களுக்கும் மிக நெருக்கமான தொடர்பு இருக்கிறது என்பது அங்கு கலந்து கொண்ட தமிழருக்கும் தமிழரல்லாதவர்களுக்கும் மிக நன்றாகவே தெரியும். அதனால்தானோ என்னவோ, அந்த விடயம் இந்த நிகழ்வில் முதன்மைப்படுத்தப்படவில்லை. ஆஸ்திரேலியக் கொடியை ஏற்றியவர் ஆஸ்திரேலிய இராணுவத்தில் மேஜராகக் கடமையாற்றி இளைப்பாறியுள்ள சேரலாதன் தர்மராஜா என்ற தமிழர் என்பது இந்த நிகழ்வுக்குமெருகூட்டியிருந்தது.

- கவல்கணன்

Tamil Genocide Monument inaugurated...

(Cntd. from page 18)

was it a physical genocide, it was an attack on Tamils everywhere," Brown added.

Ranjan Sriranjan, the Chair of the NCCT said the new monument "serves as place for the Tamil Canadian community to come together and remember the victims of the Tamil genocide." "It also allows us to share our traumatic experience and educate our fellow Canadians," he added.

Vijay Thanigasalam, MPP for Scarborough-Rouge Park, said that the monument serves as a "powerful symbol that ensures that our history will never be erased." "We remember May 2009, we remember the No Fire Zones being shelled, we remember the devastation of the bombardment of cluster bombs and chemical bombs being used against Tamil people," Thanigasalam said. "We remember the 169,796 people who are unaccounted for to this day. We will never forget that."

Juanita Nathan, MP for Pickering-Brookin, said that the Tamil community has even "deeply impacted" by the memory of the genocide, the fight for justice and the pursuit of truth. The monument "reminds us of the lives lost, the communities torn apart and the unimaginable pain endured by many innocent lives," Nathan noted.

Rugsha Sivanandan, the Executive Director of the National Council of Canadian Tamils (NCCT) thanked Brampton Council for their "unanimous support" in building the monument. "You have sent a powerful message that truth, justice and remembrance matters in this city," Sivanandan said

Real estate excellence, every time.

Rajmogan Selliah
Sales Representative
Direct: 416 569 3200
Email: srajmogan@gmail.com
Buy | Sell | Lease | Invest
210 - 80 Corporate Drive,
Toronto, ON M1H 3G5
Office: 416 284 5555

Residential, Commercial and Investment Properties

ALL YOUR
CATERING
NEEDS
CALL 416 - NANTHA 1 ext. 1
416 - 626-8421 ext. 1
FEEL GOOD
Taste Together
நந்தா உணவகம்
NANTHA RESTAURANT
INDIAN / CEYLON
TAMIL RESTAURANT IN GTA
Kipling & Steeles
(416-NANTHA-1 Ext. 2)
#18 - 5010 Steeles Ave W Etobicoke,
ON M9V 5C6
Warden & Finch
(416-NANTHA-1 Ext. 3)
Bridlewood Mall #106 - 2900 Warden Ave,
Scarborough, ON M1W 2S8
Middlefield & Steeles
(416-NANTHA-1 Ext. 4)
#2 - 2002 MiddleField Rd
Markham, ON L3S 1Y5
(Beside Fresh Food City Super Store)
(416-NANTHA-1 Ext. 5)
#8 - 2200 Brock Rd,
Pickering, ON L1X 2R2
Food Court - 6, Majestic City
(416-NANTHA-1 Ext. 6)
2900 Markham Rd, Scarborough, ON M1X 1E6
416 - NANTHA 1 | 416 - 626-8421
www.nantha.com


Build Your Dream Home
SABESAN'S
CHOICE
We build 10,000sq. feet (minimum) warehouse from 139.00 per sq.feet.
400 Kilometre per hour Wind resistance.
Termite Proof
Compare traditional Building Energy Savings.
Mould Proof
Sound Resistence
Roof Top Greenhome
உங்கள் வீட்டுடன் இணைந்ததாக மேலதிக இருப்பிட வசதியை ஏற்படுத்த விரும்புகிறீர்களா?
எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள் !
Sabesan
விருது பெற்ற தொழிற்றுறை நிபுணர்
416.605.1990
kgsabesan@hotmail.com

NKS Draperies & Blinds

210 Silver Star Road, Unit. 825
(Midland & Finch) Scarborough, ON

416 321 6420

- Vertical blinds
- Venetian blinds
- Draperies
- Curtains
- Shutters

உங்கள் இல்லங்களை மாளிகையாக்கிட

அழையுங்கள்
கேதா

தமது சிறப்பான சேவையினால்
தகுந்த விருதுகளைப் பெற்ற நிறுவனம்

Dr. Shan A. Shanmugavadivel & Associates

டாக்டர் அ. சண்முகவடிவேல்



* Orthodontics * Implants * Cerec Crowns

பற்களை ஒழுங்கு செய்தல், 'இம்பிளான்ற்' சிகிச்சைகளில் கனடாவில் பயின்ற பல வருட அனுபவமுள்ள குடும்ப பல் வைத்தியர்.

MONDAY - FRIDAY

(416) 266-5161

(Near Kennedy Subway - Rainbow Village Building)

RAINBOW VILLAGE DENTAL OFFICE
2466 Eglinton Avenue East, Unit #7
Scarborough, Ontario M1K 5JB

டாக்டர் எம்.கே. முருகானந்தன்

கொப்பளிப்பான் Chickenpox

அழகான இளம் பெண் அவள். கைதேர்ந்த சிற்பியால் கடைந்தெடுத்த பொற்சிலை போல இருப்பாள். எவருக்குமே அவளுடன் பேசிக் கொண்டிருப்பதில் மனநிறைவு ஏற்படும்.

அன்று அவள் வைத்தியசாலைக்கு வந்த போது, ஏற்கனவே காத்திருந்தவர்கள், தங்கள் நம்பரை விட்டுக் கொடுத்து அவளை உடனடி - யாகவே என்னிடம் உள்ளே அனுப்பி வைத்தனர்.

அதற்குக் காரணம் அவள் மீதுள்ள அன்பும் அபிமானமும் அல்ல! அருவருப்பினால். பல நாட்கள் குளிக்காத அழுக்கினாலும், வியர்வை நாற்றத்தினாலும், புண்கள் சீழ்ப் பிடித்திருந்ததாலும் அருகில் வைத்திருக்கப் பிடிக்காமல் உடனடியாகவே அனுப்பினர்.

அவளுக்குக் கொப்பளிப்பான் (Chickenpox) போட்டிருந்தது. மிக அதிகமாகப் போட்டதோடு சீழும் பிடித்து ஆளையே மாற்றியிருந்தது. அழகிய பொற்சிலை அலங்கோலமாக மாறியிருந்தது.

கட்டிளம் பருவத்தினருக்கு கொப்பளிப்பான் வந்தால் பொதுவாக மோசமாகவே தாக்குவதுண்டு. அவள் சிறு வயதாக இருந்த காலத்தில் கொப்பளிப்பான் தடுப்பூசி அறிமுகமாகாததால், போடப்படவில்லை. எனவே நோய் தொற்றுவதற்கான வாய்ப்பு அதிகம். சரி அதை விடுங்கள். ஆனால் ஆரம்பத்திலேயே மருந்து சாப்பிட்டிருந்தால் நோயின் தாக்கத்தைக் குறைத்திருக்கலாம்.

“ஏன் மருந்து எடுக்க வரவில்லை” எனக் கேட்டேன்.

“பக்கத்து வீட்டு அன்ரி மருந்து சாப்பிடக் கூடாது எண்டவ.”

“ஏனாம்?”

“அம்மன் வருத்தத்திற்கு மருந்து போடக் கூடாதாம்.”

‘என்று தணியும் இந்த மூடநம்பிக்கை மோகம்’ என பாரதி போலப் பாடத் தோன்றியது.

கொப்பளிப்பான் என்பது ஒரு வைரஸ் நோய். அது Varicell Zoster Virus என்ற கிருமி தொற்றுவதால்தான் ஏற்படுகிறதே ஒழிய தெய்வ சாபத்தால் அல்ல!.

தெய்வங்கள் ஏன் மனிதனுக்கு நோயைக் கொடுத்து துன்பத்தை விளைவிக்கப் போகின்றன என நாம் பகுத்தறிவோடு சிந்திக்கப் பழகவில்லை.

சூட்டு நோய் என்று பலரும் சொன்னாலும் கூட குளிர் காலங்களிலேயே அதிகம் பரவுகிறது. கடும் வெப்பத்தை அக் கிருமிகள் தாங்க முடியாத - தால்தான் வெப்ப காலங்களில் பரவுவது குறைவு.

கொப்பளிப்பான் போட்ட குழந்தைகளை நீண்ட நாட்களுக்குப் பாடசாலை செல்ல அனுமதிக்க மாட்டார்கள். காரணம் மற்றவர்களுக்கும் தொற்றிவிடும் என்பதால். உண்மையில் இது வேகமாகப் பரவும் நோய்தான். ஆயினும் ஆரம்ப கட்டங்களிலேயே வேகமாகப் பரவும். அதாவது காய்ச்சல் வந்து கொப்பளங்கள் போட ஆரம்பிக்கும் நேரத்தில் மற்றவர்கள் எதிர்பாராத விதமாக சுவாசம் மூலம் தொற்றும். பின்பு கொப்பளங்களில் உள்ள நீரின் மூலமும் தொற்றும். கடைசிக் கொப்பளம் போட்ட 5 நாட்களின் பின் தொற்றுவதில்லை.

கிருமி தொற்றினாலும் நோய் வெளிப்பட இரு வாரங்கள் வரை செல்லும். இது புரியாததால்தான் பலரும் கொப்பளங்கள் காயும் நேரத்தில்தான் மற்றவர்களுக்குத் தொற்றுகிறது என எண்ணுகிறார்கள். அதனால்தான் பாடசாலைக்கும் செல்வதை நீண்ட காலம் தவிர்க்கிறார்கள். இது தவறு.

அந்தப் பெண் செய்த இரண்டு தவறுகளால்தான் அவளது நோய் கடுமையாகியது.

கொப்பளிப்பான் போட்ட இரண்டு நாட்களுக்குள் வைத்தியரிடம் சென்று Aciclovir போன்ற வைரஸ் கொல்லி மருந்து சாப்பிட்டிருந்தால் நோயின் தாக்கத்தை மிகவும் குறைத்திருக்கலாம். இந்த மருந்து சாப்பிடுவதால் எந்த வித ஆபத்தோ பக்க விளைவோ ஏற்படாது. நீண்ட காலமாகப் பாவனையில் இருந்து மிகவும் அனுபவப்பட்ட மருந்து.

18 வயதிற்கு மேற்பட்டவர்களும், கர்ப்பணிப் பெண்களும் மருந்து சாப்பிட்டு நோயின் தாக்கத்தைக் குறைப்பது மிகவும் முக்கியமாகும்.

இரண்டாவது தவறு குளிக்காதது ஆகும். கொப்பளிப்பான் நோயின் போது குளிப்பது அவசியம். குளிப்பதால் கொப்பளங்களில் பக்டீரியா கிருமி தொற்றி சீழ்ப் பிடிக்காது தடுக்கலாம். கிருமி தொற்றினால் காய்ச்சல் அதிகரிக்கும். புண்கள் பெருத்து மறுக்கள் ஆழமாகப் போடும். நகச் சூட்டு வெந்நீரில் குளிப்பது நல்லது.

“குளிர்மையான சாப்பாடுதான் சாப்பிட வேண்டுமா? மாமிச உணவு சாப்பிடலாமா” என்றெல்லாம் கேட்பார்கள். எந்த வித சாப்பாட்டினாலும் நோய் பெருகாது. விரும்பியதைச் சாப்பிடலாம். ஆயினும் மத உணர்வுகளையும், பாரம்பரிய நம்பிக்கைகளையும் முறித்து மாமிச உணவு சாப்பிடுவது அவசிமல்ல.

இந்நோய்க்கெதிரான தடுப்பு ஊசி இலங்கையில் பல வருடங்களாகக் கிடைக்கிறது. ஆயினும் அரச தடுப்பூசித் திட்டத்தில் இது அடங்க - வில்லை. தனியார் துறையில்தான் போடப்படுகிறது.

12 வயதிற்கு உட்பட்ட பிள்ளைகளுக்கு ஒரு ஊசி மட்டும் போட்டால் போதுமானது.

12 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு ஒரு மாத இடைவெளியில் இரண்டு ஊசிகள் போடப்பட வேண்டும்.

தடுப்பூசி போடுவதால் கிடைக்கும் நோய் எதிர்ப்புச் சக்தி வாழ்நாள் முழுவதும் நீடிக்கும் என தடுப்பூசித் தயாரிப்பாளர்கள் சொல்கிறார்கள்.

OIL CHANGE SPECIAL $34.95
+ Tax & Disposal Fees
Semi-Synthetic Oil Change includes:
Up to 5 L Standard Motor Oil
New Filter
Free Vehicle Inspection
Complete Front & Rear Brake Replacement or $25 off on each
$50 OFF
FREE!
BRAKE OR SHOCK INSPECTION
LIMITED TIME OFFER
SEE STORE FOR DETAILS
MY MECHANIC
இப்போது
இரண்டு இடங்களில்!
MY MECHANIC AUTO & TIRE
4530 Steeles Avenue East
Markham, ON L3R 0L2
905-946-1000
1095 Ellesmere Road,
Scarborough ON M1P 2WP
416-757.1000
info@mymechanicauto.ca
mymechanicauto.ca

உங்களுக்குத் தெரியும்,
நம்பிக்கையுடனான தரமான சேவைகள்..
தகுதியான வெற்றிகளுக்கான
தரமான தெரிவு
On high, with your thoughts
PROMAR Ltd.
AWARDS & PROMOTIONS
நகரின் முன்னணித் தமிழர் நிறுவனம்
இப்பொழுது
வீடு விற்பனைத்
துறையிலும்
www.promarawards.com 416-291 2344
33 Fieldside Drive, Scarborough ON M1V 2C4

ISSN 1206-0585